# 1 பேதுரு
# ஒரு அறிமுகம்

*அவசியம் என்ற வகையில் ஒரு எழுத்தாளர், தாம் வாழும் காலத்தைப் பிரதிபலிக்கிறார். காலம் கடந்த சத்தியத்தை அவர் அளிக்கிறார் என்றாலும், அவற்றை அவர் வாழும் காலத்து உலகத்தின் சந்தர்ப்பப் பொருளில் அவர் அளிக்கிறார். எழுத்தாளர் எழுதும் ஒவ்வொரு விஷயமும் அவர் வாழும் காலத்து உலகத்தை ஓரளவிற்குப் பிரதிபலிக்கும், ஆனால் அவர் உருவாக்கும் பதிவேடு ஒரு கடிதமாக இருந்தால், எழுத்தாளரும் அவரது தொடக்க வாசகர்களும் வாழும் இடத்தை எழுத்தாளரின் வார்த்தைகள் பிரதிபலிக்கும் என்ற எதிர்பார்ப்பு அதிகரிக்கிறது. எழுத்தாளரும் அதைப் பெற்றுக்கொள்பவர்களும் பொது அனுபவத்தையும் பழக்கவழக்கங்களையும் பகிர்ந்து கொள்ளும்படியும், ஒரே இடங்கள் மற்றும் மக்களை அறிந்துகொள்ளும்படியும், ஒரு கடிதத்தில் ஒருவர், சாதாரணமாக எதிர்பார்க்கிறார். அந்தக் காரணத்தினால், முதல் வாசகர்களுக்கு, எழுத்தாளரின் உலகம் மற்றும் அனுபவங்களைப் பிரதிபலிக்கத் தேவையில்லை அல்லது குறைந்த பட்சம் இலேசான தேவை தான் உள்ளது. இருப்பினும், எழுத்தாளருடனோ அல்லது தோற்றகால வாசகர்களுடனோ தனிப்பட்ட பழக்கம் கொண்டிராத, பின்தொடரும் மற்ற வாசகர்களுக்கு - இரண்டாம் நிலை வாசகர்களுக்கு - இவ்விஷயம் உண்மையாக இருக்காது.*

*ஒரு கடிதத்தின் இரண்டாம் நிலை வாசகர்கள், அது உண்டாக்கப்பட்ட காலம் மற்றும் இடம் ஆகியவற்றின் சூழ்நிலையில் இருந்து எவ்வளவு தூரம் பிரிக்கப்பட்டு இருக்கிறார்களோ, அவ்வளவுக்கு அவர்கள், அதை எழுதியவர் மற்றும் முதல் வாசகர்கள் ஆகியோரின் உலகத்தைப் பற்றிப் புரிந்துகொள்ள மனவிழிப்புணர்வுடன் முயற்சி மேற்கொள்வதன் அவசியம் அதிக நிச்சயமாக உள்ளது. அது எந்த ஒரு நிருபத்திற்கும், பழைமையானதோ அல்லது நவீனமானதோ, ஏவப்பட்டதோ அல்லது ஏவப்படாததோ உண்மையாகவே இருக்கிறது. நவீன வாசகர்கள், 1 பேதுரு நிருபத்தை அணுகும்போது, அவர்கள் அதை, குவிந்து சேர்ந்த நூற்றாண்டுகள் மற்றும் திணிக்கப்பட்ட கலாச்சார எல்லைகள் ஆகியவற்றின் ஊடே வாசிக்கின்றனர். இதன் எழுத்தாளரையும், அவர் எப்போது வாழ்ந்தார் என்பதையும் கையில் உள்ள இந்தப் பதிவேட்டை எழுத அவரைத் தூண்டியது எது என்பதையும் நாம் அறியும்போது, இந்த நிருபத்தைப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதல் வளம் அடையும்.*

*1 பேதுரு நிருபம் பற்றி நாம் பின்வருவன போன்ற கேள்விகளைக் கொண்டு வருகிறோம்: இதன் எழுத்தாளர், தமது வார்த்தைகளை யார் முதலில் வாசிப்பார்கள் என்று எதிர்பார்த்தாரோ, அந்த முதல் வாசகர்களுடன் அவர் கொண்டிருந்த உறவின் வகையென்ன? குறிப்பிட்ட இந்த மக்களுக்கு, குறிப்பிட்ட இந்த வேளையில் இதன் எழுத்தாளர் இதை எழுதக் காரணமான சுழ்நிலைகள் யாவை? இதன் எழுத்தாளர், இதன் முதல் வாசகர்கள் மற்றும் சுற்றிலும் இருந்த கலாச்சாரம் ஆகியவற்றில் மேலாதிக்கம்*

*செய்து கொண்டிருந்த மார்க்கரீதியான நம்பிக்கைகள் யாவை? அந்த மக்களின் மீது மேலாதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த எழுதப்படாத சமூக நியதிகளும் பழக்க வழக்கங்களும் யாவை? எழுத்தாளரும் வாசகர்களும் பகிர்ந்து கொண்ட மொழி என்ன? அவர்களின் உலகில் மக்கள் எவ்வாறு பிழைத்தனர்? அவர்கள் எவ்வகையான அரசின்கீழ் வாழ்ந்தனர்? அவர்கள் பகிர்ந்துகொண்ட சமூக நிறுவனங்கள் யாவை? இந்தக் கேள்விகள் ஒவ்வொன்றும் இதே போன்ற அக்கறை கொண்ட பல கேள்விகளைச் சுழற்றி விடுகிறது.*

*மிகத் தொலைவான காலம் மற்றும் இடத்தில் இருந்து நமக்கு வந்துள்ள எந்தப் பதிவேட்டையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், இவ்வகையான தகவல்களை ஆழ்ந்து ஊடுருவி அறிதல் அவசியமாக உள்ளது. இந்தப் பதிவேடு ஒரு கடிதமாக இருக்கையில், அதன் தனிநபருக்குரிய இயல்பினால் இப்படிப்பட்ட ஊடுருவி அறிதல் என்பது விசேஷித்த வகையில் மிகவும் அத்தியாவசியமானதாக உள்ளது. 1 பேதுரு நிருபம் அதிகம் முறைப்படியானதாக இருக்கையில், வழக்கமான ஒரு கடிதத்தில் நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் ஜாக்கிரதையாக வடிவமைக்கப்பட்டுள்ளன, இருந்தாலும் இது ஒரு கடிதமாகவே உள்ளது. 1 பேதுரு நிருபத்தை எழுதியவராலும் அவர் யாருக்கு எழுதினாரோ அவர்களாலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட உலகத்துடன் நாம் எவ்வளவு முழுமையாக ஒன்றாகிறோமோ - அந்த அளவுக்கு, அவர்கள் புரிந்துகொள்ளும்படி பேதுரு விரும்பியதை நம்மாலும் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் புரிந்துகொள்ளும்படி எதிர்பார்க்கப்பட்ட விஷயங்களை நாம் புரிந்துகொள்ளும்போது, இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு இந்த நிருபம் அறிவுறுத்த விருப்பநோக்கம் கொண்டிருப்பது என்ன என்பதை மதிப்பிடும் வழிமுறையை நோக்கி ஒரு முக்கியமான அடிவைப்பை நாம் எடுத்து வைத்திருப்போம்.*

## ஒரு நிருபம்

*பேதுரு எழுதிய முதலாம் நிருபம் பற்றிச் சிலர் வேறுவிதமாக விவாதித்து இருந்தாலும், இது ஒரு கடிதமாகவே உள்ளது. இந்தப் பதிவேட்டின் குறிப்பிடத்தக்க பகுதிகள் தோற்ற காலத்தில் ஒரு கடிதமாக அல்ல, ஆனால் அறிவுறுத்தும் கையேடாகவே எழுதப்பட்டுள்ளன என்று ஒரு சில கல்வியாளர்கள் கூறியுள்ளனர். கிறிஸ்துவுக்குள் புதிதாக மனமாறியவர்களின் பிரயோஜனத்திற்காக ரோமாபுரியில் இது எழுதப்பட்டது என்று கோட்பாட்டளவில் கூறப்பட்டுள்ளது. பேதுரு எழுதிய முதலாம் நிருபம், கிறிஸ்தவராக இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்திற்று என்பதைத் தோற்ற காலத்தில் விளக்கப்படுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது. சிலர், 1 பேதுரு தொடக்கத்தில், புதிதாக மனம் மாறியவர்களுக்கு, ஞானஸ்நானச் சடங்கிற்கான வழிகாட்டும் புத்தகமாக எழுதப்பட்டது என்று சிலர் விவாதித்துள்ளனர்.[1] பிற்பாடு, பக்தியுள்ள சில கிறிஸ்தவர்கள் இந்தப்பதிவேட்டை ஒரு கடித வடிவமாகத் தழுவியெழுதி, அதற்கு அப்போஸ்தலரான பேதுருவின் பெயரைக் கொடுத்து, பரவலாகச் சுற்றுக்கு விட்டனர் என்று கோட்பாடு கூறச் செல்கிறது. உண்மை யாகக் கூறுவதென்றால், இந்தக் கோட்பாடு, பழமைவாத வேதாகமக்*

கல்வியாளர்கள் மத்தியில் ஆதரவைப் பெற்றதாக ஒருக்காலும் காணப்படுவதில்லை. காலங்கள் சென்றபோது, விடுதலையியல் கல்வியாளர்களில் பெரும்பான்மையானவர்களும் கூட இதை மறுத்துள்ளனர். இது ஏன் என்பதற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பது சிரமமானதாக இருப்பதில்லை.

ஏவுதல் பெற்றுள்ளமை பற்றிய கேள்விகள் ஒருபுறம் இருக்க, ரோமாபுரியில் பேதுருவிடம் இருந்து தோற்றுவிக்கப்பட்ட ஒரு அறிவுறுத்துதல் அல்லது ஞானஸ்நானம் பற்றிய பதிவேட்டின் உருவத்தை மறைத்து, பின்பு ஆசியா மைனர் பகுதியிலிருந்த சபைகளுக்குப் பரப்ப, எவரொருவரையும் தூண்டியது என்ன என்பதைக் கற்பனை செய்வது கடினமானதாக உள்ளது. 1 பேதுரு நிருபத்தை அனுப்பியவர், அதை ஞானஸ்நான சடங்கிற்கு ஒரு வழிகாட்டியாக அதன் முதல் வாசகர்கள் பயன்படுத்த வேண்டும் என்று நோக்கங் கொண்டிருப்பார் என்றால், அதை ஒரு நிருபமாக உருமறைக்க வேண்டியது ஏன் என்று ஒருவர் வியப்படையக் கூடும். இந்த நிருபத்தை அனுப்பிய நபர் அல்லது நபர்கள், நிருபமாகத் தோன்றும் இதை உண்மையில் ஞானஸ்நான சடங்கிற்கான பதிவேடு உருமாற்றப்பட்டுள்ளது என்று இதன் தொடக்க வாசகர்கள் உணர்ந்து அறிவார்கள் என்று எதிர்பார்த்திருக்கக் கூடுவது எப்படி? இந்தக் கோட்பாட்டை முன்னேறச் செய்தவர்கள் இதற்குத் திருப்திகரமான விளக்கங்கள் எதையும் அளிக்கவில்லை.

1 பேதுரு நிருபத்தின் வாழ்த்து, புத்திமதிகள், ஆறுதல்படுத்தும் வார்த்தைகள், நினைவூட்டுதல்கள் மற்றும் முடிவுரை ஆகிய யாவும், பழங்காலக் கடிதங்களில் பொதுவாகக் காணப்படும் வடிவங்களாக உள்ளன. இத்துடன் கூடுதலாக, சபையின் பழங்காலப் பாரம்பரியம், 1 பேதுரு நிருபம் நமக்கு வந்து சேர்ந்துள்ள கடித வடிவத்தில் இருந்தது என்பதைத் தவிர வேறு எதையும் அறிவதில்லை. 1 பேதுரு நிருபம் கடிதமாகத் தோன்றுதல் தவிர வேறு எந்தப் பதிவேடாகவும் இருக்கும் என்று நம்புவதற்குக் காரணம் எதுவும் இருப்பதில் லை. இருப்பினும், 1 பேதுரு நிருபம் ஒரு ஞானஸ்நான அல்லது ஞான உபதேசப் பதிவேடாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் என்று சந்தேகப்பட்டுள்ள எவரொருவரும், எதிர்பாராத கனியையே உண்டாக்கியுள்ளனர். இது கிறிஸ்தவர்களின் சுய புரிந்துகொள்ளுதல் என்ற உணர்வில், ஞானஸ்நானத்தின் முக்கியத்திற்குக் கவனத்தை ஈர்த்துள்ளது.

தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், தங்கள் மனமாற்ற அனுபவத்தை, குறிப்பாகத் தங்கள் ஞானஸ்நானத்தைப் பற்றி நினைவூட்டப்படுகையில், இது விசுவாசம் நிறைந்த, தேவபக்தியுள்ள வாழ்விற்கு, ஊக்குவித்தல் மற்றும் தூண்டுதலைத் தொடர்ந்து தரும் ஒரு ஆதாரமூலத்தை அவர்களுக்கு அளித்தது என்பது உண்மையே. பவுலின் வார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால், பொதுவாக நவீன கால விளக்கவுரையாளர்கள் உணர்ந்து அறிந்துள்ள விஷயங்களைக் காட்டிலும், "மறுஜென்ம முழுக்கு" (தீத்து 3:5) என்பது, பேதுருவின் செய்தியில் அதிகமாகப் பயன்பட்டுள்ளது. இந்தப் பதிவேடு, ஞானஸ்நானச் சடங்கு பற்றிய வழிகாட்டியாகத் தோற்றுவிக்கப்பட்டது என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றாலும், இது உண்மையாக உள்ளது. பேதுரு தமது வாசகர்களுக்கு, மனமாற்றம்/ஞானஸ்நானம் பற்றிய பல குறிப்புகளைத் தரவேண்டும் என்பது மிக அரிதாகவே

எதிர்பார்க்கப்படாததாக உள்ளது (1:4, 23; 2:2, 3; 3:21). பேதுருவோ அல்லது அவரின் முதல் வாசகர்களோ, தங்கள் ஞானஸ்நானத்தைப் பற்றி நினைக்காமல், கிறிஸ்துவுக்குள் தங்கள் மனமாற்றம் பற்றி நினைத்தல் என்பது கேள்விக்கு அப்பாற்பட்டதாக உள்ளது.

## இந்த நிருபத்தின் ஒருமைப்பாடு

1 பேதுரு நிருபம் ஒரு ஒருங்கிணைந்த பதிவேடாக உள்ளதா இல்லையா, அதாவது இது ஒரு எழுத்தாளரால் ஒரு சந்தர்ப்பத்திற்காக எழுதப்பட்டதா இல்லையா என்று கேட்பது முக்கியமானதாக உள்ளது. இந்தப் புத்தகத்தின் ஒருமைப்பாட்டைப் பற்றி எழுப்பப்படும் கேள்விகள் பொதுவாக, 1 பேதுரு 4:12ம் வசனத்தைச் சுற்றிச் சுழலுகின்றன. 1 பேதுரு 4:11ம் வசனம் ஒரு துதிப்பாடலாக, துதியின் கூற்றாக, பொதுவாக ஒரு கடிதத்தின் முடிவில் அல்லது குறைந்தபட்சம் அதன் முடிவுக்கு அருகில் பொதுவாக இருப்பதாக உள்ளது. இத்துடன் கூடுதலாக. 4:12-19ல் உள்ள, வாசகர்களின் பாடுகள் பற்றிய விவரிப்பு மிகவும் விரிவாக்கப்பட்டதாக மற்றும் ஒருவேளை, இந்தப் பத்தகத்தில் வேறிடங்களில் காணப்படுவதைக் காட்டிலும் மிகவும் வலிவானதாக உள்ளது. 1 பேதுரு 4:12-5:14 வரையிலான பகுதி மட்டுமே உண்மையான நிருபமாக இருக்கத் தொடங்கிற்று என்ற கருத்தைச் சிலர் கொண்டுள்ளனர். சில காலத்திற்குப் பின்பு, யாரோ ஒருவர், முன்னதாக விவரிக்கப்பட்ட ஞானஸ்நானம் பற்றிய கருத்து யூகத்தை 4:12-5:14 உடன் இணைத்து அதை அப்போஸ்தலரான பேதுருவின் பெயரைக் கொண்டு அனுப்பினார் என்று இந்த விவாதம் கூறிச்செல்கிறது.

1 பேதுரு நிருபம் துணுக்குகளாகவும் துண்டுகளாகவும் தொடங்கிற்று என்ற கருத்தை நெருக்கமாகப் பரிசீலனை செய்யும்போது, அக்கருத்து தோல்வியடைகிறது. முதலாவது, ஒரு துதிப்பாடல் ஒரு பதிவேட்டின் முடிவில் மாத்திரமே காணக்கிடக்க வேண்டும் என்ற சட்டம் எதுவும் இருப்பதில்லை. பவுல் தமது துதிப்பாடல்களில் மிகவும் அழகிய ஒன்றை 1 தீமோத்தேயு 6:15, 16ல் எழுதி, பின்பு தமது நிருபத்தைத் தொடர்ந்து எழுதினார். எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் பாதிப்பகுதி எழுதிய பின்பு, துதிப்பாடல் ஒன்றை அளிக்கப் பவுல் நின்று நிதானித்தார் (எபேசியர் 3:20, 21). மற்றும், 1 பேதுரு 4:12-19ல் உள்ள பாடுகள் பற்றிய விவரிப்பு வலிவானதாக இருக்கையில், இந்த நிருபத்தில் இதற்கு முந்திய பகுதியில் அப்போஸ்தலர், தமது வாசகரின் விசுவாசம் “அக்கினியால் சோதிக்கப்பட்டு இருந்தது” என்று எழுதும்போது கடுமையான பாடுகள் பற்றி மறைமுகமாக விவரித்தார் (1:7).

1 பேதுரு நிருபம் இரண்டு அல்லது அதற்கு அதிகமான பதிவேடுகளாகத் தோற்றுவிக்கப்பட்டு, அவைகள் ஒரு கடிதமாகத் தோன்றும்படி ஒன்றிணைக்கப் பட்டன என்ற யூகமானது அக உணர்வு விவாதங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. இவற்றை உண்மை என்று ஏற்றுக்கொள்வதற்கு வற்புறுத்தும் காரணங்கள் எதுவும் இருப்பதில்லை. பேதுரு தாம் யாருக்கு இந்த நிருபத்தை எழுதினாரோ, அவர்கள் மத்தியில் புதிதாக ஏற்பட்ட துன்பங்கள் பற்றி அவர் அறிந்து பின்பு, 4:12-5:14 வசனப் பகுதியைச் சேர்த்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது, ஆனால் அதுவும்கூட நிச்சயமற்றதாக உள்ளது. 4:12-5:14 வசனப்பகுதிகள், அப்போஸ்தலருக்கு வந்த புதிய தகவல்களுக்குப்

பின்பு, இரண்டாம் அமர்வில் கூட்டப்பட்டிருந்தால், அது இந்தப் பணியின் ஒருங்கமைவை அரிதாகவே வழிவிலக்குகிறது எனலாம்.

## இந்த நிருபத்தின் சந்தர்ப்பம்

ஒரு கடிதத்தைப் புரிந்து கொள்வதற்கு, அதை எழுத்தாளர் ஏன் எழுதினார் என்ற கருத்துணர்வைக் கொண்டிருப்பதைக் காட்டிலும் அதிகம் இடர்பாடுள்ள காரணி மிக அரிதாகவே உள்ளது. பேதுரு இதை ஏன் எழுதினார்? இதை எழுதக் காரணமானது என்று எந்த சூழ்நிலைகள் இவரது முதல் வாசகர்கள் மத்தியில் மேலோங்கியிருந்தன? வேதாமத்திற்குப் புறம்பே இருந்து கிடைக்கும் வரலாற்று ரீதியான தகவல்களுடன் சேர்த்து, 1 பேதுரு நிருபத்தை மிக நெருங்கி வாசித்தல் என்பது, அந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க நமக்கு உதவக்கூடும். குறுகிய இந்த ஐந்து அதிகாரங்களைக் கவனமாக வாசித்தலானது ஒரு முக்கியமான கவனிப்புக்கு வழிநடத்துகிறது: அப்போஸ்தலர் ஏன் இதை எழுதினார் என்பதைப் புரிந்துகொள்ள, அவரது வாசகர்களின் உபத்திரவம் அதிகமானவற்றைச் செய்கிறது. உண்மையில் உபத்திரவம் என்பதே இந்த நிருபத்தினூடே ஒரு சிவப்பு நூலாக ஓடுகிறது.

பின்தொடரும் பகுதிகளில் நாம், 1 பேதுரு நிருபம் எழுதப்பட்ட காலம் பற்றி ஆராய்வோம், ஆனால் இப்போது நாம், பேதுரு இந்த நிருபத்தை முதல் நூற்றாண்டின் 60 களில் எழுதியிருக்கலாம் என்று கூறுவோம். அது உண்மையாக இருக்கும் பட்சத்தில், அவரது வாசகர்களில் சிலர் பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கிறிஸ்தவர்களாக இருந்திருக்க வாய்ப்புண்டு. காலம் சென்றபோது அவர்களில் சிலர் கிறிஸ்துவுக்குத் தங்கள் முதுகைத் திருப்பியிருந்தனர். மேலும், விசுவாசத்தில் நிலைத்திருந்தவர்களும் நன்கு நிலைத்திருக்கவில்லை. சிலர் ஊக்கமிழந்து போயினர்; அவர்களின் விசுவாசம் அலைவுபட்டிருந்தது. பேதுருவின் வாசகர்கள் தங்கள் கிறிஸ்தவ அனுபவத்தில் உபத்திரவத்தை இணைத்துப் பார்க்க அவர்களுக்கு உதவுவதற்காகப் பேதுரு இந்த நிருபத்தை எழுதினார். அவர்கள் சந்தித்திருந்த உபத்திரவத்திற்குச் சுலபமான விளக்கம் எதையும் அவர் கொண்டிருக்கவில்லை, ஆனால் உலகத்தில் தேவன் தமது சித்தத்தைச் செயல்படுத்திக் கொண்டிருந்தார் என்பதை அவர்கள் உணர்ந்தறிவது முக்கியமானதாக இருந்தது. சில விஷயங்களில் உபத்திரவம் என்பது ஆவிக்குரிய வகையில் உறவு ஏற்படுத்துதலை நிரூபித்திருந்தது. நேர்த்தியான உலோகத்தை (பொன்னை)ப் போன்று, அவரது வாசகர்கள் அக்கினியால் பரிசோதிக்கப்பட்டு சுத்தமானவர்களாகவும் பண்பட்டவர்களாகவும் ஆகியிருந்தனர் (1:7).

அப்போஸ்தலரின் கிறிஸ்தவ சகோதரர்களும் சகோதரிகளும், இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிட்டிருந்தமைக்காக மிகுந்த விலைசெலுத்திக் கொண்டிருந்த காரணத்தால், அப்போஸ்தலர் கவலையடைந்திருந்தார். தேவன், உபத்திரவத்தைத் தடைசெய்ய வல்லவராக இருத்தல் பற்றி அப்போஸ்தலரின் சிந்தையில் கேள்வியெதுவும் இருக்கவில்லை. அவர் ஏன் இவ்வித கேள்வியெதையும் கொண்டிருக்கவில்லை என்பது, தேவன் தமது சித்தத்தைச் செயல்படுத்துவதன் இரகசியங்களில் மறைந்திருந்தது. தேவன் உபத்திரவத்திற்குக் காரணராக இராதிருக்கையில், உபத்திரவத்தின்மூலம் அவர் தமது நோக்கங்களைச்

செயல்படுத்த வல்லவராக இருந்தார். தேவபக்தியுள்ளவர்கள் மத்தியில் உபத்திரவம் என்பது தெய்வீக நோக்கங்களுக்குப் பயன்படும் அளவிற்குக் கூட, மனிதரின் மீறுதல் மற்றும் பாவம் ஆகியவற்றை, மேற்கொள்ளத் தேவன் வல்லவராக இருந்தார். இயேசுவிற்கு நேர்ந்த பாடுகள் ஒரு உதாரரணமாக வைக்கப்பட்டிருந்தது (2:21; 3:17, 18; 4:13). ஆண்டவர் பாடுபட்டதால், அவரது மக்களும் பாடுபட வேண்டும் என்பதை வினோதமானது என்று நினைப்பவர் யார்?

இந்த நிருபத்தின் ஓட்டத்தில் பேதுரு நான்குமுறைகள், தமது வாசகர்களுக்கு உபத்திரவம் ஏற்படும் என்பதை நேரடியாகக் குறிப்பிட்டார் (1:6-9; 3:13-17; 4:12-19; 5:9, 10). விசுவாசிகள் சிறைப்படுத்தப்பட்டு, சித்திரவதைப்பட்டனர் என்று கருத்துத்தெரிவிப்பவையாக இவ்வார்த்தைகள் தோன்றுவதில்லை. மாறாக கிறிஸ்தவரால்லாத அயலகத்தவர் அல்லது ஒருவேளை தங்கள் சொந்தக் குடும்பத்தினரிடத்தில் இருந்தும் வந்த, எதிர்பாராத வெறுப்புணர்வு, சகிக்க இயலாமை மற்றும் புறங்கூறுதல் ஆகியவற்றின்கீழ் அவர்கள் புடைக்கப் பட்டிருந்ததாகக் காணப்படுகின்றன. பேதுருவின் வாசகர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவத்தின் இயல்பைப் பற்றி அவர் ஒருக்காலும் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை, ஆனால் குறிப்புகள் இருக்கின்றன. அவர்கள் தங்களைக் குற்றம் சாட்டுபவர்கள் வெட்கமடையும்படி கண்ணியமான மற்றும் நேர்மையான வாழ்வை வாழும்படி, 2:12 மற்றும் 3:16 ஆகிய வசனங்களில் அவர் வேண்டுகோள் விடுத்தார். அவிசுவாசிகளிடம் இருந்து அவர்கள் பெறும் பழிகூறுதல் அவர்களின் உபத்திவத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்பது இங்கு கருத்தாக உள்ளது. கிறிஸ்தவர்கள் புறதெய்வ வணக்கத்திற்குத் தங்கள் முதுகைத் திருப்பியதால், அவர்களுடைய அயலகத்தவர்களில் அவிசுவாசிளாக இருந்தவர்கள், திகைப்படைந்தனர் என்று 4:4ல் அவர் கூறினார். இதன் காரணமாக அவர்களின் அயலகத்தவர்கள் அவர்களை தூஷித்தனர்.

பேதுருவின் வாசகர்களுடைய உடனடியான உபத்திரவம், அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது குடியுரிமை அலுவலகரீதியானதாகவோ இருந்ததாகத் தோன்றவில்லை. இருப்பினும் அரசு அலுவலர்களிடம் இருந்து வரும் உபத்திரவப்படுத்துதல் தொடுவானத்தில் அல்லது அருகில் வந்துகொண்டிருந்ததாகக் குறிப்புகள் இந்த நிருபத்தில் உள்ளன. பேதுரு தமது வாசகர்களை, ஆட்சியாளர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டபோது (2:13-17), அவர் உண்மையான பிரச்சனை ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கக் கூடும். சில கிறிஸ்தவர்கள், ரோம ஆளுகையின் மீது வெறுப்புணர்வு கொண்டிருக்கலாம். கிறிஸ்தவம் புதிதாயிருந்தது. அதிகாரிகள் விசுவாசிகளைக் கூர்ந்து ஆய்வு செய்து, நடைபெற்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வு அல்லது குற்றம் ஆகியவற்றிற்கு அவர்களைப் பழிசாட்டி இருக்கலாம். நவீன உலகத்தில் போன்றே பழங்காலங்களிலும், ஒரு புதிய மார்க்கமானது சந்தேகத்தின் மேகங்களின்கீழ் வந்திருக்க வாய்ப்பு இருந்தது.

இந்தக் தொடக்க காலத்தில், ரோமாபுரியில் இருந்த அதிகார வர்க்க அலுவர்கள் கிறிஸ்தவத்தை அதிகமாய்க் கவனித்தனர் என்பதற்குக் கொஞ்சமே சாட்சியம் உள்ளது. ஆளும் அலுவலர்களிடமிருந்து கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் எந்த அளவிற்கு வந்திருந்தாலும், அவைகள் பேரரசர்கள்

அல்லது மாநில ஆளுநர்களிடம் இருந்து அல்ல, மாறாக உள்ளூர் நகர நீதிபதிகளிடம் இருந்து வந்திருக்கவே வாய்ப்பு உள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களைச் சந்தை இடங்களில் விற்பதை அல்லது குடியுரிமை விஷயங்களில் பங்கேற்பதை, உள்ளூர் அலுவலர்கள் கடினமான விஷயமாக்கி இருக்கலாம். பொருளாதார ரீதியான பழிவாங்கும் நடக்கைகள் மற்றும் சமூகரீதியாகக் குற்றம் சாட்டுதல் ஆகியவை, கிறிஸ்தவர்களை (பிறர்) கவனிக்கப் போதுமானதாக இருந்தது. அவரது நாமத்தைத் தரித்துக் கொண்டவர்கள் ஒரு விலை செலுத்த வேண்டியிருந்தது என்பதை அறிந்தனர். கிறிஸ்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த வெட்கக் கேடான நடத்துதலைக் கையாளத் தேவையான ஆவிக்குரிய ஆதார வளங்களை அவர்களுக்குத் தருவதற்காகப் பேதுரு இந்த நிருபத்தை எழுதினார். அவர்கள் எதிர்காலத்தில் சந்திக்க கூடியதாயிருந்த இன்னும் கடினமான சோதனைகளுக்கும்கூட அவர்களைத் தயார்ப்படுத்தப் பேதுரு இந்த நிருபத்தை எழுதினார்.

கிறிஸ்தவர்களின் பாடுகளுடன் கூடுதலாக, இன்னொரு ஆய்வுக்கருத்தும் இதை எழுதியவரின் சிந்தையில் இருந்து வெகுதொலைவில் இல்லை என்பதை, 1 பேதுரு நிருபத்தை நெருக்கமாக வாசித்தல் வெளிப்படுத்துகிறது. இந்த உபத்திரவம் மற்றும் பாடுகள் ஆகியவற்றுடன் உறவுபட்டதாக, புதிய ஏற்பாட்டு முழுவதிலும் எதிரொலிக்கும் ஆய்வுக்கருத்தாக உள்ளது. கர்த்தருடைய மறுவருகை மற்றும் கிறிஸ்தவர்களின் சொந்த மகிமைப்படுதல் ஆகியவை அண்மையில் இருந்ததாக, அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு அறிவித்தார் (1:5, 7, 13; 2:12; 4:7, 13; 5:1, 4, 10). அவர்கள் தாங்கிக்கொண்ட எந்தத் தவறுகளும் பழிவாங்கப்படும். உலகத்தின் நியாயாதிபதியாகவும் அவர்களின் சார்பில் பழிவாங்குபவராகவும் கர்த்தர் திரும்ப வருவார். பேதுரு தமது வாசகர்களின் ஆவல் நிறைந்த நம்பிக்கையைப் புதுப்பிப்பதற்காக எழுதினார் (1:13). கர்த்தருடைய மறுவருகையின் மீதான தைரியமான நம்பிக்கையானது, அவர்களின் விசுவாசத்துடன் இணைந்திருந்த பெரும்வருத்தத்தைக் கையாள அவசியமான பலத்திற்கான ஆதாரமூலமாக இருக்க வேண்டியதாயிற்று (3:14). அப்போஸ்தலரின் முதல் வாசகர்களினுடைய பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட கர்த்தரின் மறுவருகை ஆகியவை, 1 பேதுரு நிருபத்தின் இரண்டு ஒருமைப்படுத்தும் ஆய்வுக்கருத்துக்களாக உள்ளன. கர்த்தர் மறுபடியும் வரும்போது, நம்பிக்கைகள் உணர்ந்தறியப்படும் மற்றும் சந்தோஷங்கள் நிறைவாகும் (1:6-9).

பேதுரு இந்த நிருபத்தை எழுதியதற்கான காரணம் பின்வருமாறு தொகுத்துரைக்கப்பட முடியும்: கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகளாக முடிந்தபோது, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர் என்பதை அவர்களுக்கு மறு உறுதிப்படுத்த அவர் விரும்பினார் (4:14, 16). பாடுகள் எதிர்பார்க்கப்பட வேண்டியதாகவே இருந்தது. இந்த உலகம் அறிந்திராத சிலவற்றை, அதாவது இயேசு, கர்த்தராகவும் நியாயாதிபதியாகவும் மீண்டும் தோன்றுவார் என்பதை (காண்க 1:17; 4:17) அவர்கள் அறிந்திருந்த காரணத்தினால் அவர்கள் விடாமுயற்சியுடன் இருக்க முடிந்தது. அவர் மறுபடியும் வரும்போது, மீட்கப்பட்டவர்களுக்கான ஆசீர்வாதங்களை அவர்கள் பகிர்ந்துகொள்வார்கள். பேதுருவின் வாசகர்களுக்கு, "[அவர்கள்] விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை

அடைவார்கள்" (1:9) என்று பேதுரு மறு உறுதிப்படுத்தினார். பவுலைப் போன்று பேதுருவுக்கு, "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று" (ரோமர் 8:18) இருந்தது.

மேலாதிக்கம் செய்யும் இந்த இரு ஆய்வுக்கருத்துகளில் இருந்து வளர்ந்தது என்ற வகையில், பேதுரு உரைத்த மற்ற விஷயங்கள் கிறிஸ்தவ வாழ்விற்கு மையப்பொருளாக இருந்தன. பாடுகள் என்பது குறைகாணும் தன்மையை வளர்க்கும். குறைகாணும் தன்மை என்பது கிறிஸ்தவர்கள், தங்களை இந்த உலகம் நடத்திய அதே வழியில் இந்த உலகத்தை அவர்கள் நடத்துவதற்கு அவர்களை வழிநடத்தும். அவர்கள் பரிசுத்தமும் நலமுமான வாழ்வை வாழவேண்டும், தேவபக்தியற்ற நடத்தைக்கு ஒருக்காலும் தங்களை ஒப்புக்கொடுத்துவிடக் கூடாது என்ற புத்திமதிகளுக்கு அப்போஸ்தலர் மீண்டும் மீண்டும் திரும்பினார் (2:12; 3:8, 9, 17; 4:3, 15). கிறிஸ்தவர்கள் திறந்த முகத்துடனான நேர்மையுடன், பொய்களையும் வஞ்சனைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் வெறுப்புணர்விற்கும் ஏளனத்திற்கும், சாந்தத்துடனும் தயவுடனும் பதில் அளிக்க வேண்டியிருந்தது (3:9). பாடுகள் வரவேண்டும் என்றால், அது கிறிஸ்தவர் அநியாயம் செய்ததால் வருவதாக ஒருக்காலும் இருக்கக் கூடாது என்று பேதுரு வேண்டுகோள் விடுத்தார் (3:17; 4:15). தயவு, ஒப்புக்கொடுத்தல் மற்றும் சேவை செய்தல் ஆகியவை, இந்த உலகத்தின் வெறுப்புணர்வு சகிக்க இயலாத்தன்மை ஆகியவற்றினால் அவர்களிடம் இருந்து பறித்துக்கொள்ளப்பட முடியாத பண்புகளாக இருக்க வேண்டும். தமது வாசகர், பரிசுத்த மக்களாக இருந்தனர் (1:14-16; 2:9), தேவனுடைய ஆலயத்தில் ஜீவனுள்ள கற்களாக இருந்தனர் (2:5) என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதற்கு அப்போஸ்தலர் விரும்பினார். பரிசுத்த தன்மை என்பது, இயேசு வாழ்ந்திருந்த வாழ்வைப் போல் வாழ்வதில் அவர்களின் வெற்றிக்கு ஒரு அளவீடாக இருந்தது. வாழ்வின் எல்லா விஷயங்களிலும் இயேசு முன்மாதிரியாக, *hupogrammos,* ஆக இருந்தார். அவரது உதடுகளில் பாவம் இருந்ததில்லை; மனிதர்கள் அவரை வைதபோது, அவர் பதிலுக்கு வையவில்லை (2:21-23). விசுவாசிகளின் உதடுகளில் பாவம் இல்லாதிருக்க வேண்டும்; அவர்களை மனிதர்கள் வையும்போது, அவர்கள் பதிலுக்கு வையக்கூடாது.

## இந்த நிருபத்தை எழுதியவர்

சுவிசேஷங்களில் சீமோன் பேதுரு பெரிதும் முக்கியத்துவமாகத் தோன்றுகிறார். மற்ற அப்போஸ்தலர்களில் எவரும், "இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்" கூட (யோவான் 21:7), இயேசுவின் வரலாற்றில், பேதுருவுடன் ஒப்பிடும்படியான இடம் ஒன்றைப் பெற்றிருப்பதில்லை. "பேதுரு" என்ற பெயர் சுவிசேஷங்களில்ல சுமார் எழுபது முறைகள் காணக்கிடைக்கிறது. கூடுதலாக இருபத்தி ஆறு முறைகள் - இவற்றில் பெரும்பான்மையானவை யோவான் சுவிசேஷத்தில் உள்ளன - "சீமோன்" மற்றும் "பேதுரு" என்ற பெயர்கள் ஒன்றாகக் காணக்கிடக்கின்றன. இந்த அப்போஸ்தலர் சீமோன் என்று மாத்திரம் பதினேழு முறைகள் அழைக்கப்படுகிறார், மற்றும் ஒரு முறை சுவிசேஷ நூல்களில் இவர் கேபா என்று அழைக்கப்படுகிறார் (யோவான்

1:42). இதற்கு நேர் எதிராக, அப்போஸ்தலரான யோவான் இருபது முறைகள் மாத்திரமே பேசப்படுகிறார். இயேசுவைத் தவிர வெளியே உள்ள வேறு எவரும் சுவிசேஷப் புத்தகங்களில் பேதுருவைப் போன்று மைய மேடைக்கு வந்திருப்பதில்லை.

இவர் அவசரத்தில் பேசிய தவறான அறிவுறுத்தல், இவரது அலைபாய்ந்த விசுவாசம், இவரது எளிய மனிதப்பண்பு, இவர் நம்பிக்கை வைத்தலைத் தவறாகப் பயன்படுத்தியது ஆகியவற்றைக் குறித்து, இவரைப் பற்றிச் சுவிசேஷப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள வரலாறுகளைக் கூறுவதில், கிறிஸ்தவர்கள் ஒருபோதும் களைப்படைவதில்லை. தண்ணீர்மீது கர்த்தரிடமாய் நடக்கக் தொடங்கியவர் பேதுருதாம், ஆனால் அவரது விசுவாசம் அலைவுபட்டது (மத்தேயு 14:28-33). பிலிப்பி செசரியாவில் பேதுரு, “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” என்று அறிக்கையிடத் தைரியம் கொண்டிருந்தார் (மத்தேயு 16:16), இதற்குச் சற்றுப்பின்பு அவர் கடுமையான கடிந்துகொள்ளுதலைப் பெற்றார் என்றாலும் (மத்தேயு 16:23), தமது அறிக்கையைத் தைரியமாய்ச் செய்தார். ஆண்டவரை விசாரணை செய்தபோது பேதுரு அங்கிருந்தார். அவர் தமது ஆண்டவரைத் தமது உரிமையாக்கிக் கொள்ளச் சந்தர்ப்பம் தரப்பட்டபோது, நசரேயனாகிய இயேசுவைத் தமக்குத் தெரியவே தெரியாது என்று அவர் மறுதலித்தார் (மத்தேயு 26:69-75). பல நூற்றாண்டுகளுக்கு முன்பு போன்றே இன்றைய நாட்களிலும் பேதுருவின் வரலாறுகள் விசுவாசிகளுக்கு உயிர்ப்பூட்டுகின்றன.

சுவிசேஷப் புத்தகங்கள் முடியும் வேளையில் பேதுருவைப் பற்றிய விஷயங்களை நாம் முடித்துக் கொள்வதில்லை. நடபடிகள் புத்தகத்தின் முதலில் வரும் அதிகாரங்களில், பெந்தெகொஸ்தே நாளுக்கு வழிநடத்திய, மறுரூபமான அப்போஸ்தலரை நாம் எதிர்கொள்கிறோம். அவர் இந்தப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பிரசங்கித்து, யூதர்களுக்கு இராஜ்யத்தின் கதவுகளைத் திறந்து வைத்தார் (நடபடிகள் 2:14-36; காண்க மத்தேயு 16:19). இதற்கும் அப்பால், அவர் கொர்நேலியுவின் வீட்டாருக்குப் பிரசங்கித்ததன் மூலம் புறஜாதியாருக்கு விசுவாசத்தின் கதவை முதன் முதலாகத் திறந்து வைத்தவராக இருந்தார் (நடபடிகள் 10; 11). தொடக்ககால சபையில் அவரது மேன்மைத்துவம், அவரது சாட்சியத்தின் நேர்மையான நம்பகத்தன்மை மற்றும் யூத எதிராளிகளிடம் அவர் தைரியமாக எதிர்த்து நின்றமை ஆகியவை, இயேசு தமது சீஷர்கள் மீது அளித்த வல்லமையை நமக்கு நினைவூட்டுகின்றன. இம்மனிதருக்கு “பேதுரு” அல்லது “கேபா” என்று பெயர்கொடுத்ததில் (யோவான் 1:42) இயேசுவின் ஞானத்தை நாம் நடபடிகள் புத்தகத்தில் காணுகின்றோம், இப்பெயர்கள் முறையே, கிரேக்கு மற்றும் அரமாயிக் மொழிகளில் “பாறை” என்று அர்த்தப்படுகின்றன. மூன்று ஆண்டுகளில் இயேசு, அலைபாய்ந்த ஒரு மீனவரை பலத்தின் கோபுரமாக மாற்றியிருந்தார். இது இயேசுவைப் பற்றிய வரலாற்றில் மாத்திரமல்ல, ஆனால் நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சபையின் தொடக்ககால வரலாற்றிலும் சீமோன் பேதுரு முக்கியமான இடத்தில் இருக்கிறார்.

சுவிசேஷங்கள் மற்றும் நடபடிகள் புத்தகம் ஆகியவற்றில் பேதுருவின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கருத்தாய் ஆராய்ந்தபின்பு, அப்போஸ்தலரின் இரண்டு நிருபங்கள் சிலவேளைகளில் புறம்பே ஒதுக்கப்பட்டு, புதிய

ஏற்பாட்டுப் பதிவேடுகளில் ஏறக்குறைய மறக்கப்பட்டிருத்தல் என்பது வினோதமானதாக உள்ளது.[2] எபிரெயருக்கு எழுதிய நிருபத்திற்கும் வெளிப்படுத்தின விசேஷத்திற்கும் இடையில் இணைக்கப்பட்டுள்ள யாக்கோபு, பேதுரு, யோவான் மற்றும் யூதா ஆகியோர் எழுதிய கத்தோலிக்க நிருபங்கள் (இவற்றை நாம் பொது நிருபங்கள் என்று மாற்றுப் பெயரில் அழைக்கிறோம்) காணாமற்போயிருக்கக் கூடியவைகளாக உள்ளன. ஒருவேளை பவுலின் நிருபங்களினுடைய வல்லமை மற்றும் கிறிஸ்தவ உபதேசத்தை விளக்குவதில் அவைகள் செயல்பட்ட மூழ்கடிக்கும் பணிப்பொறுப்பு ஆகியவை பேதுருவின் நிருபங்களைச் சார்பளவில் புறக்கணித்தலை விளைவித்திருக்கலாம். இந்த புறக்கணிப்பிற்குக் காரணம் எதுவாக இருப்பினும், 1 பேதுரு நிருபம் நமது கிறிஸ்தவ மரபில் ஒரு முக்கிய பாகமாக உள்ளது. ஜெபம் நிறைந்த வகையில் இந்த நிருபத்தைப் படித்தலானது கிறிஸ்தவ விசுவாசத்தை வளப்படுத்த ஒருக்காலும் தவறாது. இந்த நிருபத்தின் செய்தி இது உண்டாக்கப்பட்ட முதல் நூற்றாண்டு உலகின் காலத்தைக் கடந்து நிற்கிறது.

இந்த நிருபத்தின் திறவு வார்த்தைகள், இதன் எழுத்தாளர் என்று நாம் நம்பியிருக்கக் கூடியவரை தெளிவாக அடையாளப்படுத்துகின்றன. இந்த நிருபம் "இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு" என்பவரிடம் இருந்து வருவதாக சாட்சியத்தின் அடிப்படையிலும், இரண்டாம் நூற்றாண்டு சபையின் பொதுவான சாட்சியத்தின் அடிப்படையிலும், சுவிசேஷப் புத்தகங்கள் மற்றும் நடபடிகள் புத்தகம் ஆகியவற்றில் நாம் எதிர்கொள்ளும் அதே பேதுருதாம் தமது பெயர்தாங்கியுள்ள இந்த நிருபத்தை எழுதினார் என்பதில் சிலர் சந்தேகம் கொண்டனர்.[3] எதிர்பார்க்கப்பட்டபடி, சந்தேகம் கொள்பவர்கள் இருந்துள்ளனர், ஆனால் சீமோன் பேதுரு தாம் இதன் எழுத்தாளர் என்பதை உறுதிப்படுத்த ஆதரிக்கும் சாட்சியங்கள் ஏராளமாக உள்ளன.

இந்த நிருபத்தைப் பேதுரு எழுதினார் என்பதில் சந்தேகம் கொண்டுள்ளவர்கள், இது ஒரு கலிலேய மீன்பிடிப்பவரிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவதைக் காட்டிலும் அதிக மேன்மையான இலக்கியப் பண்பைக் கொண்டுள்ளது என்று விவாதித்துள்ளனர். மேலும் அவர்கள், இந்த நிருபம் பேதுரு ரோமாபுரியில் மரித்த 60 களின் மையக் காலப்பகுதிக்குப் பிந்தியதான சபையின் முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது என்ற கருத்தையும் பராமரித்தனர்.[4] இத்துடன் கூடுதலாக, அப்போஸ்தலரான பேதுரு இதை எழுதியிருந்தால், கர்த்தருடன் அவருக்கிருந்த தனிப்பட்ட தமது உறவுபற்றிய மறைமுகமான குறிப்புகளுடன் அவர் தமது வேண்டுகோள்களை விடுத்திருப்பார் என்பது நிச்சயம் என்றும் சிலர் விவாதித்துள்ளனர்.

கிரேக்க மொழியில் உள்ள 1 பேதுரு நிருபம், புதிய ஏற்பாட்டில் உள்ள புத்தகங்களில் மிகச்சிறந்த ஒன்று என்பது உண்மையே. இருப்பினும், சில்வானு/சீலா என்பவர் அவரது எழுத்தாளராக அல்லது அமேனுயெனசிஸாக (5:12) இருந்ததாகப் பேதுரு ஒப்புக்கொண்ட உண்மையை நாம் காணாது விடலாகாது. சீலா என்பவர் நடபடிகள் 15:22ல் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். அவர் ஒரு யூதக் கிறிஸ்தவராக இருக்க, அவரது பெயர் கிரேக்க - ரோமக் கலாச்சாரத்தின்படியானதாக உள்ளது. எருசலேம் சபையில் இருந்து புறஜாதியாரில்

விசுவாசிகளானவர்களுக்கு, புண்படுத்தக் கூடிய ஒரு நிருபத்தை எடுத்துச் செல்லுதலில் சீலாவின் பணிப்பொறுப்பும் (நடபடிகள் 15) தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரு நிருபங்களிலும் அவர் பவுலுடன் இணைந்திருந்தார் என்ற உண்மையும் (1 தெசலோனிக்கேயர் 1:1; 2 தெசலோனிக்கேயர் 1:1), அவர் கற்றறிந்த, சொல்வளம் கொண்ட கிறிஸ்தவராக இருந்தார் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன. விஷயம் அப்படியிருந்தால், 1 பேதுரு நிருபத்தை எழுதியதில் அவரது பங்குதான் இந்த நிருபத்தின் மேன்மையான கிரேக்க மொழிநடைக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.[5] சீலா பேதுரு கூற எழுதியிருந்தார் என்றால், அவர் பேதுருவின் வாக்கியங்களை ஒரு நல்ல கிரேக்க உரையாக மறுவார்த்தை உருவாக்கம் செய்திருந்தாலும்கூட, இது பேதுருவின் நிருபம் என்றே கூறப்படுவதாக இருக்கும். சீலா ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார் என்பதால் (நடபடிகள் 15:32), 1 பேதுரு நிருபத்தின் ஏவுதலை உறுதிப்படுத்த, பேதுரு கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் அப்படியே எழுதியிருப்பார் என்று ஒருவர் யூதித்தல் அரிதாகவே தேவைப்படுகிறது.

பேதுருதாம் இதை எழுதினார் என்பதற்கான மற்ற மறுப்புகள் பற்றி, 1 பேதுரு நிருபம் 60 களின் மைய காலத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியைப் பிரதிபலிக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு, ஆசியா மைனர் பகுதியின் நாடுகளில் தொடக்க கால சபையின் மேம்பாடு பற்றிப் போதிய அளவை நாம் அரிதாகவே அறிகிறோம். அப்போஸ்தலர், கர்த்தருடனான தமது தனிப்பட்ட உறவைப்பற்றிய மறைமுகமான குறிப்பைத் தராதது ஏன் என்று நம்மால் கூற முடிவதில்லை. இருப்பினும், அவர் தம்மை "கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சி" என்று அழைத்ததை நாம் கவனிக்கிறோம் (5:1; காண்க 2:22, 23). அது போதுமானதாக உள்ளது. கையில் உள்ள சாட்சியத்தைக் கொண்டு பார்க்கையில், இந்த நிருபம் அப்போஸ்தலரான பேதுருவினால் எழுதப்பட்டது என்பதைச் சந்தேகப்படக் காரணம் எதுவும் இருப்பதில்லை.[6]

## இதைப் பெற்றுக்கொண்டவர்கள் எங்கு வாழ்ந்தனர்

கலாத்தியருக்கு எழுதிய நிருபம் மற்றும் 1 கொரிந்தியர் நிருபம் ஆகியவற்றில், பேதுருவைப் பற்றி, பவுலின் மறைமுகமான குறிப்புகளைத் தவிர்த்து, புதிய ஏற்பாட்டில் நடபடிகள் 15ம் அதிகாரம்தான் பேதுருவைப் பற்றிய கடைசிக் குறிப்பாக உள்ளது.[7] எருசலேம் கூட்டம் என்று அழைக்கப்பட்ட கூட்டத்தில் கி. பி. 50ம் ஆண்டில் இந்த அப்போஸ்தலர் பேசினார். அதன் பிறகு நடபடிகளில் நாம் அவரைப் பற்றி கேள்விப்படுவதில்லை. கி. பி. 50 மற்றும் இந்த அப்போஸ்தலர் இறந்ததாகக் கூறப்படும் 67 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பதினேழு ஆண்டுகளில் இந்த அப்போஸ்தலர் என்ன செய்துகொண்டு இருந்தார்? பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபத்தில் பேதுருவைப் பற்றிய வேதனையான குறிப்பு ஒன்றுள்ளது. கொரிந்து நகரின் சபையில் இருந்த பல்வேறு குழுக்களில் "கேபாவைச் சேர்ந்தவர்கள்" என்று உரிமை பாராட்டிய குழு ஒன்று இருந்தது (1 கொரிந்தியர் 1:12). பேதுரு கொரிந்து நகரில் இருந்திருந்தாரா? அவர் அங்கு இருந்தார் என்று பவுல் கூறவில்லை. கேபா குழுவினர் எருசலேம் அல்லது வேறு எங்கிருந்தாவது கொரிந்து நகருக்கு வந்து சேர்ந்திருக்கலாம். "கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள்" என்று

*உரிமை பாராட்டிய குழு ஒன்றும் இருந்தது என்பதை நாம் கவனிக்கிறோம். இயேசு அந்த நகரில் இருந்திருக்கவில்லை, குறைந்தபட்சம் அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் அங்கிருந்ததில்லை என்பது தெளிவு. பேதுரு கொரிந்து நகரில் இருந்தாரா இல்லையா என்பது நிச்சயமற்றதாக உள்ளது, ஆனால் பலஸ்தீனத்தின் சுற்றுவட்டாரங்களுக்குப் புறம்பே பேதுரு முனைப்பாக ஊழியம் செய்திருந்தார் என்பதைப் பவுலின் மறைமுகக் குறிப்பு கருத்தாக உணர்த்துகிறது. 1 கொரிந்தியர் 9:5ம் வசனம், பவுலைப் போன்றே பேதுருவும் பயணம் செய்யும் ஊழியக்காரரானார் என்பதற்கு மேலும் சாட்சியம் அளிக்கிறது.*

*ஆசியா மைனர் பகுதியில் பேதுரு காலத்தைச் செலவிட்டிருந்தார் என்று நாம் சற்று தைரியமாகக் கூற முடியும். அவர் தமது நிருபத்தில், தற்போதய நாடான துருக்கியை உள்ளடக்கும் அக்காலத்து ரோமானிய மாகாணங்கள் நான்கைக் குறிப்பிட்டார். பொந்து மற்றும் பித்தினியா ஆகிய பெயர்கள் 1 பேதுரு 1:1 ல் தனியாகப் பட்டியலிடப் பட்டிருக்கையில், இவ்விரு பகுதிகளும் கி. மு. முதல் நூற்றாண்டில். பாம்ப்பே என்பவர் பகுதியை ஒருங்கமைவு செய்தபோது, ஒரே ரோம மாகாணமாக இணைக்கப் பட்டிருந்தது. இந்தப் பகுதிகளில் சிதறி இருந்த சபைகளில் பேதுரு நேரில் சந்தித்துப் பழகி இருந்தகாரணத்தினால் இந்த சபைகளுக்குப் பேதுரு இந்த நிருபத்தை எழுதினார் என்று யூகித்தல் நியாயமானதாக உள்ளது. பவுல் ஊழியப்பயணம் செய்த அதே காலகட்டத்திலேயே பேதுருவின் ஊழியப்பயணங்களும் நடைபெற்றிருக்கலாம். பேதுருவும் அவரது உடன் ஊழியர்களும் ஆசியா மைனரின் பரந்த பகுதிகளில் சபைகளை நிலைநாட்டி இருந்தால், அதுவே அவர் “பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்க[ளுக்கு]” இந்த நிருபத்தை எழுதியதற்குக் காரணமாக இருக்கும் (1:1).*

*இந்த மாகாணங்கள் பட்டியல் இடப்பட்டுள்ள வரிசை முறை, கவனிக்கத் தக்கதாக இருக்கலாம். சில்வானு/அல்லது சீலா (5:12) அல்லது வேறு யாரோ ஒரு கிறிஸ்தவச் செய்தியாளர், வடக்கு மத்திய பொந்து நாட்டில் கருங்கடல் கரையில் அமையப்பெற்றிருந்த சினோப் என்ற நகருக்கு ஒரு கப்பலில் சென்றிருக்கலாம். அவர் கலாத்தியா மாகாணத்தின் வழியே, தெற்குமுகமாய்ப் பயணமாகி இருக்கலாம், அங்கிருந்து தென்கிழக்கில் கப்பதோக்கியாவுக்குச் சென்று, ஆசியாவிற்குள் வடக்கு முகமாய்ப் பயணப்பட்டு, அங்கு அப்பகுதியில் உள்ள கடல்துறைமுகங்கள் ஒன்றில் ஒரு கப்பலில் ஏறியிருக்கலாம். (பின்தொடரும் பக்கத்தில் உள்ள வரைபடத்தைக் காணவும்). அந்தச் செய்தியாளர் சென்ற இடங்கள் எல்லாவற்றிலும் அவர், விசுவாசிகளைக் கண்டிருப்பார், அவர்களுக்குப் பேதுருவின் வார்த்தைகளை வாசித்திருப்பார். இந்தத் தொடக்க காலத்திலேயே ஆசியா மைனர் பகுதி முழுவதிலும் சிறு சிறு குழுக்களாகக் கிறிஸ்தவர்கள் சிதறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது.*

*பேதுருவினால் குறிப்பிடப்பட்ட மாகாணங்கள் ஒரு பெரிய புவிப்பரப்பை உள்ளடக்கி இருந்தன. அங்கிருந்த மக்கள், பல்வகைப்பட்ட சமூக, மக்களின மற்றும் மொழிகள் பேசும் குழுக்களாக இருந்தனர். ரோமானிய அதிகாரம் ஏறுமுகமாயிருந்த மேற்கத்திய மாகாணங்களாகிய ஆசியா மற்றும் பித்தினியா ஆகியவை, கிறிஸ்தவம் உதயமாவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே*

தங்களின் கடைசி அரசர்களினால் ரோமாபுரிக்கு கையளிக்கப்பட்டிருந்தன. பொந்து, கலாத்தியா மற்றும் கப்பத்தோக்கியா ஆகியவை படையெடுப்பினால் ரோமப் பேரரசுடன் இணைக்கப்பட்டிருந்தன.

கி. மு. 133ல் ரோமர்கள் ஆசியாவைச் சேர்த்துக் கொண்டபின்பு வந்த முதல் பத்து ஆண்டுகளில், இந்த மாகாணம், பேராசை பிடித்த ரோமானிய வரிவசூல் செய்பவர்களின் கைகளில் மிகவும் பயங்கரமாக உபத்திரவப்பட்டது. ரோம அதிகாரங்களை எதிர்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது அந்த மாகாணத்து ஜனங்கள் அதை சாதகமாக எடுத்துக் கொண்டார்கள். கி.மு. 88க்குப் பின்பு சுமார் இருபது ஆண்டுகளாக, பொந்து தேசத்து அரசராயிருந்த ஆறாம் மித்திரிடேட்ஸ் என்பவர், யுத்தம் செய்ததினால் அந்த மாகாணத்தைப் பெரிதும் தொல்லைக்கு உள்ளாக்கினார். ஆசியாவில் இருந்த பெரும்பான்மையான நகரங்கள் பொந்து தேசத்து அரசருடன் இணைந்து ரோமாபுரிக்கு எதிராகத் தங்கள் பங்கைக் கையளித்தன. கி. மு. 60 களில், ரோமானிய சட்டசபையானது, மித்திரிடேட்ஸை தீர்மானமாகக் கையாளும்படி பாம்ப்பே என்பவருக்கு உத்தரவிட்டது. இந்த ரோமானியப் படைத்தளபதி, பொந்து தேசத்து அரசரைப் புறம்பே துரத்தி, ஆசியாவின் தெற்குக் கடற்கரையில் எங்கும், கடற்கொள்ளையர்களின் ஆதிக்கப்பகுதிகளில் இருந்து அவர்களை வெளியேற்றி, பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது இந்தத் துணைக்கண்டம் கொண்டிருந்த அதே மாகாண எல்லைக்கோடுகளில் இதை ஒருங்கமைவு செய்தார். மித்திரிடேட்ஸ்களின் படையெடுப்பை ஆதரித்த நகரங்களை ரோமாபுரி கடுமையாகக் கையாண்டது. கி.மு. 75ல் பித்தினியாவின் கடைசி அரசர், தமது இராஜ்யத்தை ரோமாபுரியின் அமைச்சரவைக்கும் அதன் மக்களுக்கும் கையளித்தார்.

மித்திரிடேட்ஸுக்குப் பின்பு, ஆசியா மைனரின் நகரங்கள் சமாதானத்திற்காக ஏங்கின, ஆனால் அவைகள் நிவாரணம் எதையும் கண்டடையவில்லை. கி. மு. 44ல் சீஸர் கொலைசெய்யப்பட்டபின்பு, ரோமானிய உள்நாட்டு யுத்தங்கள் தொடங்கின. ரோமானியப் படைத்தளபதிகளும் பிரபுக்களும் தங்கள் படைகளுக்கு நிதியுதவி அளிப்பதற்காக, ஆசியாவின் நகரங்களுக்கு இரக்கமற்ற வகையில் வரிவிதித்தனர். யுத்தங்கள் ஓய்ந்தபோது, கி. மு. 27ல் அகுஸ்து என்பவர் பேரரசராக உதித்தார். இவர் ரோமானியர்களின் யுத்தகடவுளான ஜானஸ் என்பவரின் கோவில் கதவுகளை மூடியவராகவும் பாக்ஸ் ரோமாவை (ரோமாபுரியின் சமாதானத்தை) நிர்மானித்தவருமாக இருந்தார். அகுஸ்து அரசன் கொடுமையான வரித்தொல்லைகளை நிறுத்தி, ஆசியா, பித்தினியா நகரங்களில் நிலையான அரசாங்கங்களை நிறுவ உதவினான். ஆசி-யாவின் இளைப்படைந்த குடியிருப்புகள் அவரைத் தெய்வீகமானவர் என்று உயர்த்தின. அகுஸ்துராயனின் மாட்சிமைதாங்கிய ஆட்சித் தொடக்கத்தில் இருந்து பேதுரு தமது முதலாம் நிருபத்தை எழுதிய காலம் வரையிலுமான ஒரு நூற்றாண்டு இடைவெளியின்போது, ஆசியா தனது வளமையை மறுபடியும் பெற்றுக்கொண்டது. அது பேரரசின் இரத்தினங்களில் ஒன்றாக இருந்தது.

ஆசியா மற்றும் பித்தினியா/பொந்துவுக்கான ரோமானிய ஆளுநர்கள், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டனர். அவர்கள் ரோமாபுரியின் முதன்மை நிர்வாக அலுவலரான கான்ஸலுக்காக [தூதருக்காக] செயல்பட்டதால்

புரோகான்ஸல்கள் அதாவது, ஆளுநர்கள் என்று அழைக்கப்பட்டனர், ஆளுநர்கள் ஒரு ஆண்டு பதவிக்காலத்தைக் கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் அலுவல் காலத்தில் செல்வந்தர்கள் ஆகும்படி எதிர்பார்க்கப்பட்டனர், உண்மையில் அவர்கள் அவ்வாறே செல்வந்தர்கள் ஆயினர். நடபடிகள் புத்தகத்தில் செர்கியுபவுல் (13:7) மற்றும் கல்லியோன் (18:12) என்ற இரண்டு ஆளுநர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆசியா மற்றும் பித்தினியா/பொந்து போன்ற மிகப்பழைய, சமாதானம் நிறைந்த மாகாணங்கள், ரோமானிய அமைச்சரவையின் நிர்வாகத்தின் கீழ் இருந்த காரணத்தினால், அவைகள் அமைச்சரவை சார்ந்த மாகாணங்கள் என்று அழைக்கப்பட்டன. இவ்விரு மாகாணங்களுமே தங்களுக்குள், கிரேக்கு பேசும் எண்ணற்ற நகரங்களைக் கொண்டிருந்தன. முதல் நூற்றாண்டில், ஆசியாவின் ஆளுநர் ஆவதற்குச் செலுத்தப்படுவதைக் காட்டிலும் ரோமானிய அமைச்சரவைக்கு உயர்ந்த விலை எதுவும் செலுத்தப்படவில்லை.

சற்றுகாலத்திற்கு, கலாத்தியாவும் கப்பத்தோக்கியாவும், ரோமானியர்களின் முகமை அரசர்களால் ஆளப்பட்டிருந்தன, பாலஸ்தீனத்தின் பெரிய ஏரோது ஒரு முகமை அரசராகியிருந்தார். கி.மு. 25ல் கலாத்தியா ரோமானிய மாகாணத்திற்குள் ஒருங்கமைக்கப்பட்டிருந்தது. கி. பி. 17ல் இதே விதி கப்பத்தோக்கியாவின் மேலும் விழுந்தது. கலாத்தியா கப்பத்தோக்கியா என்ற இரு மாகாணங்களும், பேரரசரின் நேரடி ஆளுகையின்கீழ் இருந்தன. அவைகள் பேரரசின் எல்லைகளுக்கு நெருக்கமாக இருந்த காரணத்தால், அவற்றில் அல்லது அவற்றிற்கு அண்மையில், ரோமானிய சேனைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அமைச்சரவைக்கு அல்ல ஆனால் பேரரசருக்கே இந்த சேனைகள் விசுவாசமாக இருந்தன. கலாத்தியா மற்றும் கப்பத்தோக்கியா போன்ற மாகாணங்களை ஆளுகை செய்வதற்குப் பேரரசர் தனிப்பட்ட சேனை அதிபதிகளை அனுப்பினார். அவைகள் ராஜரீக மாகாணங்கள் என்று அழைக்கப்பட்டன.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டின்போது, இந்த மாகாணத்தின் வடபகுதியில் குடியமர்ந்த கவுல்கள் என்ற மக்களினத்தின் பெயரில் இருந்து, கலாத்தியா மாகாணம் தனது பெயரைப் பெற்றிருந்தது. இந்த மாகாணத்தின் தெற்குப்பகுதியில் அந்தியோகியா, லீஸ்திரா போன்ற நகரங்கள் இருந்தன, இவற்றின் அரசும் மொழியும் இவற்றை கிரேக்க - ரோமானியப் பகுதிகளாகக் குறித்தன. கப்பத்தோக்கியா என்பது அந்தப் பகுதியின் கழிமுகத்தில் இருந்தது. இந்த மாகாணத்தில் கிரேக்க - ரோமானிய முக்கிய நகரங்கள் எதுவும் இருக்கவில்லை. கப்பத்தோக்கியாவின் மக்களில் பெரும்பான்மையானவர்கள், மலையின் பகுதிகளில் ஒருங்கமைக்கப்பட்ட சிறு கிராமங்களில் வாழ்ந்தனர்.

ஆளுநராக இருந்தாலும் அல்லது பேரரசரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியாக இருந்தாலும், ரோமானிய ஆளுநர் என்பவர் சாதாரணமாக, பேரரசின் பொது மக்களின் அன்றாட விஷயங்களில் சிறு பணியையே செயல்படுத்தினார். நகரங்கள் தங்களுக்குச் சொந்தமான பொதுக்கட்டிடங்களைத் தாங்களே பராமரித்தன, காவல்படையை நிர்வகித்தன மற்றும் பொது வேலைகளுக்காகவும் ரோமாபுரிக்கு வரிசெலுத்துவதற்காகவும் தாங்களே வரிவிதித்தன. அவர்கள் பல்வேறு குழுக்களால் மேற்பார்வை இடப்பட்டனர், பொதுப்பணிகளுக்கென்று ஒரு குழுவும், வர்த்தகத்தை மே

ற்பார்வை இடுதலுக்கென்று இன்னொரு குழுவும், இதுபோன்ற பல்வேறு குழுக்களும் இருந்தன. நகரங்களில் சமாதானம் இருக்கும் வரையிலும் மற்றும் வரிகள் செலுத்தப்பட்டு இருக்கும் வரையிலும், ரோமாபுரியில் இருந்து சிறிதளவே தலையீட்டை அல்லது உதவியை அவைகள் எதிர்பார்த்தும் பெற்றுக்கொண்டும் இருந்தன. ஆசியா மற்றும் பித்தினியா/பொந்து போன்ற வளமான மாகாணங்களில், பேரரசின் எல்லைகளுக்குள் நன்கு வளம் பெற்றிருந்த பகுதிகளில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சேனைகள் எதுவும் இல்லை மற்றும் ஒரு சில ரோமானியப் போர்ச்சேவகர்களே அங்கு இருந்தனர். ரோமானிய வற்புறுத்துதலுக்கு விரைவாக, தடையின்றி இணங்குவதற்கு, அங்கு தங்கியிருந்தவர்களுக்கு, ரோமாபுரி அதிகாரம் கொண்டிருந்தது மற்றும் அதைப் பயன்படுத்த அது தயங்காது என்ற அறிவே போதுமானதாக இருந்தது. 2:13-17ல் பேதுருவின் வார்த்தைகள், அரசாங்கத்தின் பன்முனைப் படிநிலை முறைமை என்ற பின்திரைக்கு எதிரே எழுதப்பட்டன. ஆளும் அதிகாரிகளில் சிலர் ரோமானியர்களாகவும் சிலர் உள்ளூர் வாசிகளாகவும் இருந்தனர்.

1 பேதுரு நிருபத்தின் தொடக்க வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணங்களின் கலாச்சாரங்கள், மார்க்கங்கள் மற்றும் பொருளாதார நிலைகள் பல்வகைப் பட்டவையாக இருந்தன. நகரங்களின் கிரேக்கக் கலாச்சாரத்தின் பொதிவுகள் இருந்தன. ஆசியா முழுவதிலும் பித்தினியா மற்றும் பொந்து தேசத்தின் கடற்கரை நெடுகிலும், நகரங்கள் எண்ணற்றவையாகவும் வளம்பொருந்தியவையாகவும் இருந்தன. கலாத்தியா மற்றும் கப்பத்தோக்கியா என்ற மையப்பகுதியின் நாடுகளில் நகரங்கள் கொஞ்சமாகவும் சிறியவையாகவும் இருந்தன. பவுலைப் போன்றே பேதுருவும், பிரசங்கித்தலின் தமது முதல் முயற்சிகளை இந்த நகரங்களை நோக்கித் திருப்பினார் என்று யூகித்தல் நியாயமானதாக உள்ளது. வர்த்தக சாலைகளில் அமைந்திருந்த நகரங்கள், ஜெப ஆலயங்களைக் கொண்டிருந்து இருக்கக் சாத்தியக்கூறு இருந்தது, அவைகள் சுவிசேஷம் ஆரம்ப நிலையில் கேள்விப்படும் சந்தர்ப்பத்தைப் பெற்றன. கிறிஸ்துவுக்கு முதல் முதலாக மனமாறியவர்கள் பெரும்பாலும் ஜெப ஆலயங்களில் இருந்தே வந்திருக்கையில், அவர்களைத் தொடர்ந்து, தேவபக்தியுள்ள புறஜாதியார் வந்தனர், இவர்களில் சிலர் யூதர்களின் வழிகளை மதித்திருந்து, ஜெப ஆலயங்களில் கிறிஸ்தவ போதகர்கள் தோன்றும் முன்பு அடிக்கடி அங்கு வந்திருந்தனர். பேதுருவின் வாசகர்களில் ஒருசிலராவது, புறதெய்வ வணக்கப் பின்னணியில் இருந்து கிறிஸ்துவினிடம் வந்திருந்தனர் என்பதை அவரது வார்த்தைகள் தெளிவாக்குகின்றன (1:14, 18).

பேதுருவின் வாசகர்களில் பெரும்பான்மையான மக்கள், ஏராளமான கடவுள்களை ஆராதித்து வந்த மக்களிடையே வாழ்ந்திருந்தனர். அவர்களில் சிலர், கிரேக்கத் தெய்வமான பாந்தியனுக்குப் பாரம்பரியமான பக்தர்களாக இருந்தனர், ஆனால் மற்றவர்கள் சொந்த மண்ணில் வேர்கொண்டிருந்த, மா, மென் அல்லது சிபெல் போன்ற வினோதமான பெயர்களைக் கொண்டிருந்த தெய்வங்களுக்குப் பக்தர்களாக இருந்தனர். ஏதோ ஒரு காலகட்டத்தில், மார்க்க நடைமுறைகள் மந்திரவாதமாகவும் மூடநம்பிக்கையாகவும் தேய்ந்து போயிற்று. பேதுருவினால் குறிப்பிடப்பட்ட தேசங்களின் மக்கள் மத்தியில் மூடநம்பிக்கை மலிந்து கிடந்தது என்பதைச் செய்விளக்கப்படுத்தும் பழங்காலச் சாட்சியங்கள் ஏராளமாக உள்ளன.

புனித ஊற்றுகள், புனித மரத்தோப்புகள் மற்றும் அசுத்த ஆவிகளும் அடிக்கடி வந்துபோகும் பகுதிகள் ஆகியவை எல்லா இடங்களிலும் இருந்தன. சில இடங்கள், மக்கள் தங்கள் வியாதிகளில் இருந்து குணமாக்கப்படும் இடங்களாகக் கருதப்பட்டன. மற்ற இடங்களில், தனிநபர் ஒருவர் ஒரு எழுதுபலகை அல்லது பலகையில், ஒரு விரோதிக்கு எதிராக சாபம் ஒன்றை எழுதி, அதை பூமிக்கடியில் புதைத்து வைத்து, தமது கோரிக்கையை இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிகள் நிறைவேற்றும் என்று எதிர்பார்ப்பார். பவுலின் பிரசங்கத்தினுடைய செல்வாக்கின் கீழ் வந்து சேர்ந்த எபேசு நகரத்து மக்கள், ஏராளமான எண்ணிகையிலான தங்கள் மாயவித்தைப் புத்தகங்களைக் கொண்டு வந்து அவற்றை எரித்துப் போட்டதைப் புதிய ஏற்பாட்டு மாணவர்கள் நினைவுக்குக்கொண்டுவருவார்கள் (நடபடிகள் 19:19).

தேவர்களை ஆராதித்தல் என்பது, ஆசியா மைனர் பகுதி முழுதிலும் உள்ள சமூக வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்தது. தேவர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட பலிகளைச் செலுத்துதல், பண்டிகைகள் அல்லது விளையாட்டுகள் ஆகியவற்றில் இருந்து விலகி இருத்தல் என்பது பொதுவான குற்றமாக இருந்தது, களியாட்டுச் சடங்குகள் அல்லது பலிசெலுத்தும் சடங்காச்சாரங்களில் பங்கேற்கக் கிறிஸ்தவர்கள் மறுத்தபோது, அவர்கள் புறதெய்வ வணக்க சமூகத்துடன் உடனடியான முரண்பாட்டிற்கு உள்ளாயினர். விவசாய விளைபொருட்களைப் பொதுச்சந்தையில் விற்றல் அல்லது தோல் தொழில் அல்லது ஒரு பானைவிற்கும் கடை போன்ற சிறு வியாபாரங்களைச் செய்தல் என்பது கிறிஸ்தவர்களுக்குக் கடினமானதாயிற்று.

பேதுரு அறிந்திருந்த உலகத்தில் கிறிஸ்தவம் புதிதும் வினோதமுமாக இருந்தது. விசுவாசிகள் தங்கள் மீது பொதுமக்கள் வன்கண் கொண்டிராதபடி தங்கள் பலத்தினால் இயன்றவரையில் முயற்சி செய்கையில், அதில் இடர்ப்பாடு கொண்டிருந்தனர், விளக்கப்படாத திருட்டு அல்லது மர்மமான மரணம் ஒரு பகுதியில் ஏற்பட்டால், புறதெய்வ வணக்க சமூகம் அந்த நகரில் உள்ள புதிய மார்க்கத்தின் மீது அந்தப் பழியைப் போட முயற்சி செய்தது. அந்த சம்பவத்திற்குக் கிறிஸ்தவர்களே ஆணிவேராக இருந்தனர் என்பதில் சந்தேகம் இல்லை என்பதாக அவர்கள் முடிவு செய்தனர். ஒரு பூமியதிர்ச்சியோ அல்லது பஞ்சமோ ஏற்பட்டால், தங்கள் தெய்வங்களுக்குச் செலுத்தப்பட்ட சடங்காச்சாரங்களைக் கிறிஸ்தவர்கள் புறக்கணித்ததால் தான் அவ்வாறு ஏற்பட்டது என்று அவர்கள் மீது பழிபோடுதல் சுலபமானதாக இருந்தது. 1 பேதுரு நிருபத்தின் மையக் கருத்துப் பொருளான, உபத்திரப்படும் விசுவாசிகள், உலகத்தின் சந்தர்ப்பப் பொருளில் தங்களைப் போன்ற விசுவாசிகள் வாழ்ந்த பகுதிகளினால் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

## எழுதப்பட்ட காலம்

இந்த நிருபத்தில், "உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும், ... உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" என்று பேதுரு கூறும் இடமான 5:13 மாத்திரமே, பேதுரு இதை எப்போது எழுதியிருப்பார் என்பதற்கு இந்த நிருபம் தரும் ஒரே குறிப்பாக உள்ளது. பாபிலோன் என்று அழைக்கப்பட்ட ஒரு இடத்தில் பேதுரு இருந்தார் என்பதே இந்தத் கூற்றை நாம் அர்த்தம் எடுத்துக்கொள்ளும் இயல்பான வழியாக

*உள்ளது. அந்த இடத்தில் பேதுருவின் துணைவர்களாக இருந்தவர்கள் தங்கள் வாழ்த்துக்களை அனுப்பினர் என்பதே இதன் அர்த்தமாகக் காணப்படுகிறது (5:13க்கான விளக்கங்களைக் காணவும்). பாபிலோன் என்பது ஐப்பிராத்து நதியின் கரையில் அமைந்த புகழ்பெற்ற நகரமாக, கி.மு. 587ல் எருசலேமை அழித்து யூதமக்களை அடிமைத்தளைக்கு இழுத்துச் சென்ற பேரரசின் மையமாக இருந்தது. "பாபிலான்" என்ற வார்த்தையை அந்தப் புகழ் பெற்ற நகரத்திற்கான குறிப்பாக எடுத்துக்கொள்ளுதலே முதல் மனச்சாய்வாக உள்ளது. இருப்பினும், இந்தப் பெயரை நேரடியாக அவ்வாறு எடுத்துக் கொள்ளுதலில் பிரச்சனைகள் உள்ளன.*

*முதலாவது, ரோமப்பேரரசின் கிழக்குப் பகுதியுடன் அல்ல ஆனால் மேற்குப்பகுதியுடன் பேதுருவை இணைவுபடுத்துதல் என்பது தொடக்ககால சபையின் பாரம்பரியத்தில் சீரானதாக உள்ளது. பாபிலோன் தூரகிழக்கில் இருந்தது. இத்துடன் கூடுதலாக, பழங்கால உலகத்தில் இருந்து வரும் சாட்சியம் அரிதாக இருக்கையில், பேதுரு இந்த நிருபத்தை எழுதிய வேளையில், பாபிலோன் என்பது குறிப்பிடத்தக்கதல்லாத ஒரு சிறு கிராமமாகவே இருந்தது.[8] மேலும், ரோமாபுரியின் வீழ்ச்சியைப் பற்றி அப்போஸ்தலரான யோவான் குறிப்பிடும்போது, பாபிலோன் என்ற இயற்பெயரை அவர் பயன்படுத்தும் இடமான, வெளிப்படுத்தின விசேஷம் 18:2 ஐ நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், 1 பேதுரு நிருபத்தில் பாபிலோன் பற்றிய குறிப்பை நேர்ப்பொருளில் எடுத்துக்கொள்வதற்கு நாம் குறைவான நிச்சயம் கொண்டவர்கள் ஆகிறோம். கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டுடன் கொண்டிருந்த பழக்கத்தின் காரணமாக, பாபிலோன் என்பது அவர்களுக்கு, பகைமை, தேவபக்தியின்மை, புலன் இன்பம் துய்த்தல் மற்றும் அடக்குமுறை ஆகியவற்றின் அடையாளமாக இருந்தது.[9] வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவானைப் போன்று, பேதுரு ரோமாபுரியை, அதன் ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய விஷயங்களில் பாபிலோனுக்குச் சமானமாக இருக்கக் கண்டார் என்பது உறுதி. பெரிய ஆப்பிள் என்பதை நியூயார்க் நகராக அடையாளப்படுத்தும் அமெரிக்கர்களைப் போன்றே பேதுருவின் வாசகர்களும் பாபிலோன் என்பதை ரோமாபுரி என்பதாக அடையாளம் கண்டிருக்க வாய்ப்புள்ளது.*

*கடந்து செல்லுகையில் நாம், சீரமைப்பின் காலக்கட்டத்தில், ரோமன் கத்தோலிக்கத்தை உக்கிரமாக வெறுத்தவர்கள், பேதுரு ஒருக்காலும் ரோமாபுரிக்குச் சென்றதே இல்லை என்று வாதிடுதலின் மூலம், பேதுரு முதல் போப்பாக இருந்தார் என்ற உரிமைகோருதலைச் சொல்லாததாக்குவதற்கு நாடினர். சீர்திருத்த காலத்தில் இருந்த சிலர் 1 பேதுரு 5:13ல் உள்ள "பாபிலோன்" என்ற வார்த்தையை நேர்ப்பொருளில் எடுத்துக் கொண்டு, முதல் நூற்றாண்டு உலகத்தின் கிழக்குப்பகுதியில் இருந்துகொண்டு பேதுரு தமது முதல் நிருபத்தை எழுதினார் என்ற கருத்தைப் பராமரித்தனர். இந்தக் கருத்து, தற்காலங்களில்கூடச் சில வட்டாரங்களில் தொடருகிறது. இருப்பினும், சாட்சியங்கள் இதற்கு எதிராகவே உள்ளன. சீலாவும் மாற்கும் (5:12, 13) மேற்கத்திய சபைகளுடன் இணைவு கொண்டிருந்த பெயர்களாக உள்ளன என்பதை மற்ற விஷயங்களின் மத்தியில் நாம் கவனிக்கிறோம். முதல் நான்கு நூற்றாண்டுகளில் சபையின் எழுத்தாளர்கள், பேதுருவின் மரணத்தைப் பற்றிப்*

குறிப்பிடுகையில் அந்த அப்போஸ்தலர் ரோமாபுரியில் மரித்தார் என்றே கூறி, பொதுவான சாட்சியம் அளிக்கின்றனர்.

நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சபை வரலாற்றாளர் ஈசூபியஸ் அவர்கள், நீரோ பேரரசராக இருந்த காலத்தில், பேதுருவும் பவுலும் ஏறக்குறைய ஒரே வேளையில் வேதசாட்சியாக மரித்திருந்தனர் என்று புரிந்துகொண்டிருந்தார். கி. பி. 68ல் நீரோ தற்கொலை செய்துகொண்டார். பேதுரு எவ்வளவு காலம் ரோமாபுரியில் இருந்தார் என்பதை அறிதல் இயலாததாக இருக்கையில், ஆசியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவம் பற்றிய தகவல்களைப் பெறுவதற்காக, அவர் சற்றுக் காலம் ரோமாபுரியில் இருக்க வேண்டியது அவசியமாக இருந்திருக்கும். அவரது வாசகர்கள் கிறிஸ்தவர்களாகி சற்றுக்காலம் கடந்திருந்தது என்பது நிச்சயம், இந்தக் காலமானது உபத்திரவங்கள் தங்கள் வேலையைத் தொடங்கப் போதுமானதாக இருந்தது. உபத்திரவங்கள் ரோமாபுரியில் உண்டாக்கப்பட்டன என்று காட்டும் குறிப்பு எதுவும் இல்லை; இந்தத் தொடக்ககாலத்தில், உபத்திரவங்கள் பேரரசு முழுவதிலும் பரந்திருக்கவில்லை. இருப்பினும் புதிய மார்க்கத்தை சகித்துக் கொள்ள இயலாத உள்ளூர் வட்டாரங்களில் இருந்து, புறக்கணிக்கப்படுதல் மற்றும் நிதிசார் நிர்ப்பந்தம் ஆகியவை ஏற்பட்டதைக் கிறிஸ்தவர்கள் உணரத்தொடங்கினர் என்பதில் சந்தேகம் இல்லை. கடைசியாக, பேதுரு தமது நிருபத்தில் குறிப்பிட்டிருந்த சபைகள், மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு முதிர்ச்சியடையச் சற்றுகாலம் எடுத்துக்கொண்டன (காண்க 5:1). இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தைக் குறித்து நாம் உறுதியாக எதுவும் கூற இயலாது என்றாலும், 1 பேதுரு நிருபம் கி. பி. 65 க்கு அண்மையில் எழுதப்பட்டது என்று கூறுதல் ஒரு நல்ல யூகமாக உள்ளது.

## இந்த நிருபத்தின் வடிவமைப்பு

தொடக்க அழைப்புக்குப் பின்னர் (1:1, 2), பேதுரு தமது சொந்த சிந்தையையும் தமது வாசகர்களின் சிந்தைகளையும், மீட்பு, நம்பிக்கை மற்றும் அந்த வேளையின் சிரமங்களினூடே அவர்களை நிலைநிறுத்திய வாக்குத்தத்தம் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்கு வரைமுறைப்படுத்தினார். சொற்றொடருக்குப் பின் சொற்றொடர், முடிவுக்காலத்தை, நம்பிக்கை உணர்ந்தறியப்படும் கடைசி வேளையை, நினைத்துப் பார்க்கும்படி வாசகர்களைக் கொண்டுவந்தது: "ஜீவனுள்ள நம்பிக்கைக்கு ... ஜெநிப்பிக்கப்படுதல்" (1:4), "அழியாத சுதந்தரம்" (1:4), "கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்பு" (1:5), "உங்கள் ஆத்துமரட்சிப்பு" (1:9), "இந்த இரட்சிப்பு" (1:10), "இயேசுகிறிஸ்து வெளிப்படுதல்" (1:13), "இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும்" (1:17), "அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்" (1:18), "இந்தக் கடைசிக் காலங்களில்" (1:20), "உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி" (1:21).

1:3-2:10 என்பது இந்த நிருபத்தின் முதன்மைப் பகுதியாக உள்ளது. பேதுருவின் வாசகர்கள், கிறிஸ்துவைத் தழுவிக்கொண்ட மக்களாக இருத்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன என்று அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார். அவரை அறிவதற்கு முன்னர் அவர்கள், அறியாமையில்,

*மாம்ச இச்சைகளின்படி வாழ்ந்திருந்தனர் (1:14). கிறிஸ்துவுக்குள் அவர்கள் தேர்ந்துகொள்ளப்பட்ட சந்ததியாக, தேவனுக்குச் சொந்தமான மக்களாக ஆகியிருந்தனர் (1:1, 2; 2:9, 10). அவர்கள் புதிதாகப் பிறந்திருந்தபடியால், வாழ்வு ஒரு ஊழியமாக, ஒரு நோக்கம் கொண்டதாக மற்றும் ஒரு முடிவைக் கொண்டதாக ஆகியிருந்தது. அவர்கள் தங்களின், வீணாண முந்திய வாழ்வில் இருந்து விடுதலையாக்கப்பட்ட நிலையில், கர்த்தருடன் இணைதலை முன்னெதிர் நோக்கியிருந்தனர்.*

*கர்த்தருடைய மறுவருகை பற்றிப் பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டியபின்பு, தமது வாசகர்களுக்கு இன்னும் முழுமையான கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு வழிகாட்டும் புத்திமதிகள் பக்கமாய்த் தமது கவனத்தைத் திருப்பினார். இந்த நிருபத்தில் 2:11-4:11 என்ற பகுதியானது, யாக்கோபு நிருபத்தில் அடிக்கடி காணப்படும் கட்டளைகள் போன்றவற்றால் நிரப்பப் பட்டுள்ளது: "நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்" (2:12); "கர்த்தர்நிமித்தம் கீழ்ப்படியுங்கள்" (2:13); "சுயாதீனமுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்" (2:16); "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்" (2:17); இன்னும் பிற. இந்தப் பகுதியில் கர்த்தருடைய மறுவருகை மறக்கப்பட்டிருந்தது போன்று இருப்பதில்லை (2:12; 4:7). கர்த்தருடைய மறுவருகை என்ற அஸ்திபாரத்தில் இருந்தே பேதுரு தமது புத்திமதிகளை அளித்தார். அதுபோன்று, பேதுரு தமது வாசகர்களின் உபத்திரவங்களைப் புறக்கணித்ததாகவும் தோன்றவில்லை (3:13, 14). உபத்திரவப்படுதல் என்பது விசுவாசம் நிறைந்த தன்மைக்கு, புதுப்பிக்கப்பட்ட அழைப்பின் அடிப்படையாக உள்ளது.*

*4:12-5:11 என்ற இந்த நிருபத்தின் நிறைவுப் பகுதியில், பேதுரு தாம் 1:3-2:10ல் குறிப்பிட்டிருந்த ஆய்வுக்கருத்துக்களுக்குத் திரும்பினார். உபத்திரவப்படுதல் என்பது புதுப்பிக்கப்பட்ட வலிவுடன் மேல் எழுகிறது. 4:11ம் வசனமானது, வழக்கமாக ஒரு பதிவேட்டின் முடிவில் காணப்படும் துதியுடன் முடிவடைவதாலும், 4:12-5:11ன் மொழிநடை மிக அதிகமான உபத்திரவத்தைச் சுட்டிக்காட்டுவதாலும், பேதுரு தமது நிருபத்தை 4:11ல் முடித்திருக்க நோக்கங் கொண்டிருந்தார் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். 1 பேதுரு நிருபத்திற்கு இரண்டு பதிப்புகள் இருந்தன என்று ஒரு கல்வியாளர் கருத்துக் கொண்டுள்ளார். இவற்றில் முதல் பதிப்பு, சார்பளவில் மென்மையான உபத்திரவங்களைச் சகித்திருந்த கிறிஸ்தவர்களுக்கானதாக இருந்தது. 1 பேதுரு 1:1-4:11 வரையில் எழுதப்பட்ட நிருபத்தைப் பெற்றுக்கொண்ட விசுவாசிகள் இவர்களே. இரண்டாம் பதிப்பு கடுமையான உபத்திரவங்களைச் சகித்திருந்த கிறிஸ்தவர்களுக்கானதாக இருந்தது. 1 பேதுரு 1:1, 2 மற்றும் 1 பேதுரு 4:12-5:14 வரையில் எழுதப்பட்ட நிருபத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் இவர்களே.[10] பேதுரு தமது நிருபத்தை எழுதி முடித்து வைத்தபின்பு, தமது வாசகர்கள் புதிதாய் எழும்பிய பயங்கரமான உபத்திரவத்தினால் வேதனைப்பட்டது பற்றி கூடுதல் தகவல்களைப் பெற்றார் என்று மற்றவர்கள் விவாதித்துள்ளனர். அதை மனதில் கொண்ட அவர், தமது எழுத்துக்குத் திரும்பி, 4:12-5:11 வசனப்பகுதியை முடிவு வசனப்பகுதியாகக் கூட்டினார் என்று அவர்கள் கூறுகின்றனர்.[11] இவ்விரு கருத்துக்களுமே ஆழ்ந்து சிந்திக்கத் தகுதியானவைகளாக இருக்கையில்,*

உறுதியான முடிவை மேற்கொள்வதற்கு, பேதுரு இந்த நிருபத்தை எந்த சூழ்நிலைகளின் கீழ் எழுதினார் என்பது பற்றிய நமது அறிவு மிகவும் மட்டானதாக உள்ளது. 1 பேதுரு 4:12-5:11 வசனப்பகுதியானது இந்த நிருபத்தின் முற்பகுதியில் உறுதியாய்த் தோன்றாத அளவுக்கு வலிவாக, பேதுரு நிருபத்தின் வாசகர்களுடன் உபத்திரவத்தை நமக்கு முன்பாகக் காட்சிப்படுத்துகிறது என்பது தெளிவு.

பேதுரு தமது வாசகர்களில் எவரும், கிறிஸ்தவர் என்ற வகையில் உபத்திரவப்படுதலினால் வெட்கப்படக் கூடாது என்று உறுதிப்படுத்தினார் (4:16). இது புதிய ஏற்பாட்டில் “கிறிஸ்தவர்” என்ற வார்த்தை காணப்படும் மூன்று இடங்களில் ஒன்றாக உள்ளது (காண்க நடபடிகள் 11:26; 26:28). இப்படிப்பட்ட புறம்பான அழுத்தங்களில் கிறிஸ்தவர்கள் எவ்வாறு பதில்செயல்செய்ய வேண்டும்? “தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு” (4:19) ஒப்புக்கொடுத்தலின் மூலம் பதில்செயல் செய்ய வேண்டும். மூப்பர்களுக்கு உதவிகரமாக இருக்கும் அறிவுறுத்துதலின் வார்த்தைகளை உட்செருகிய அப்போஸ்தலர் (5:1-4), தமது வாசகர்கள் தாழ்மையுடனும் தெளிந்த சிந்தையுடனும் இருக்க வேண்டும் என்று புத்திமதி கூறினார் (5:5-11), மற்றும் அவர் தமது நிருபத்தை முடி-விற்குக் கொண்டு வந்தார் (5:12-14). பின்வரும் வரைகுறிப்பு இந்த நிருபத்தைப் பகுத்தாய்வு செய்வதில் உதவியாக இருக்கும்.

## வரைகுறிப்பு

I. வாழ்த்து: ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு (1:1, 2)

II. இரட்சிப்பு: விசுவாசத்தின் விளைவு (1:3-2:10)
- அ. “ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி ... ஜெநிப்பிக்கப்பட்டோம்” (1:3-5)
- ஆ. “பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுதல்” (1:6-9)
- இ. “தீர்க்கதரிசிகள் செய்த ஊழியம் நமக்கே” (1:10-12)
- ஈ. பரிசுத்த ஜனம் (1:13-16)
- உ. பயத்துடன் நடந்துகொள்ளுதல் (1:17-21)
- ஊ. அழிவில்லாத வித்தினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தல் (1:22-25)
- எ. “புதிதாய்ப்பிறந்த குழந்தைகளைப் போல” (2:1-3)
- ஏ. கிறிஸ்து, ஜீவனுள்ள கல்; கிறிஸ்தவர்கள், ஆவிக்குரிய மாளிகை (2:4-8)
- ஐ. அந்தகாரத்தில் இருந்து ஒளியினிடத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் (2:9, 10)

III. தேவனுடைய மக்களாக உபத்திரவப்படுபவர்கள் என்ற வகையில் நடந்துகொள்ளுதல் ன்எவ்வாறு?தி (2:11-4:11)
- அ. “அந்நியரும் பரதேசிகளும்” (2:11, 12)
- ஆ. கீழ்ப்படிதல்: கிறிஸ்தவ வாழ்வின் வலிவார்ந்த ஒரு பகுதி (2:13 -3:7)
  1. ஆளுகை செய்யும் அரசு அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல்

*(2:13-17)*

2. *எஜமானர்களுக்குக் கீழ்ப்படிதல் (2:18-20)*
3. *சிலுவையின் மீது இயேசுவின் கீழ்ப்படிதல் (2:21-25)*
4. *மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிதல் (3:1-6)*
5. *மனைவிகள் தங்கள் கணவர்களால் கனப்படுத்தப்படுதல் (3:7)*

இ. *நீதிக்காக உபத்திரவப்படுபவர்கள் மீது ஆசீர்வாதம் (3:8-17)*

1. *தேவனுடைய ஆசீர்வாதங்களால் கோரப்படும் பரிசுத்த வாழ்வு (3:8-12)*
2. *உங்கள் இருதயங்களில் கிறிஸ்துவைப் பரிசுத்தம் பண்ணுதல் (3:13-17)*

ஈ. *நமது பாவங்களுக்காகக் கிறிஸ்துவின் மரணம் (3:18-22)*

உ. *மாம்சத்திற்கு எதிராக [உங்கள் சிந்தையில்] ஆயுதம் தரித்துக்கொள்ளுதல் (4:1-3)*

ஊ. *புறதெய்வ வணக்கத்தார் கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருத்தல் (4:4-6)*

எ. *முடிவு சமீபமாயிருத்தல் (4:7-11)*

IV. *கிறிஸ்துவின் பாடுகளை பகிர்ந்து கொள்ளுதல் (4:12-5:11)*

அ. *கிறிஸ்துவின் பாடுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் (4:12-16)*

ஆ. *உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு ஆத்துமாவை ஒப்புவித்த (4:17-19)*

இ. *மூப்பர்களை ஊக்கமூட்டுதல் (5:1-4)*

ஈ. *தாழ்மையை அணிந்து கொள்ளுதல் (5:5-8)*

உ. *உலகம் முழுவதிலும் உங்களுக்குள்ள சகோதரத்துவம் (5:9-11)*

V. *முடிவுக் குறிப்புரைகள் (5:12-14)*

## *நடைமுறைப் பயன்பாடு*

*1 பேதுரு நிருபத்தின் செய்தி, தங்கள் வாழ்வை எவ்வாறு தொடுகிறது, அது தங்கள் விசுவாசத்திற்கு எவ்வாறு பங்களிக்கிறது மற்றும் அது தங்களைப் பாவத்தில் இருந்து திரும்பி நீதியுள்ள வாழ்வு வாழும்படி எவ்வாறு ஊக்குவிக்கிறது என்பதைக் கிறிஸ்தவர்கள் அறிய விரும்புகின்றனர். இவ்வகையான பாடங்கள் 1 பேதுரு நிருபத்தில் வசனத்திற்கு வசனம், சொல்லப்போனால் வார்த்தைக்கு வார்த்தை வெளியோடி வருகின்றன. என்றாலும், சில பாடங்கள், 1 பேதுரு நிருபத்தை முழுமையாக ஒரு நிருபம் என்ற வகையில் ஆய்வு செய்வதில் இருந்து வருகின்றன.*

### *கர்த்தருடைய மறுவருகை*

*கர்த்தருடைய மறுவருகையுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளைப் பற்றிய விபரமான விளக்கங்களை, புதிய ஏற்பாட்டின் எந்த எழுத்தாளரும் விபரமாகத் தருவதில்லை. இதற்கு மாறாக, அவரது வருகையின் மறைவான கருத்துக்கள் பற்றிக் கிறிஸ்தவர்கள் தெளிந்த புத்தியுடனும் சிந்தனை நிறைவுடனும் ஆழ்ந்து கருத வேண்டும் என்று அவர்களைப் பேதுருவும் மற்றவர்களும் வேண்டிக்*

கேட்டுக்கொண்டனர்.

(1) கர்த்தர் மறுபடியும் வருவார் என்பதால், வாழ்வின் சலிப்புகள், அக்கறைகள் மற்றும் ஏமாற்றங்கள் ஆகியவை சகித்துக்கொள்ள சுலபமாக உள்ளன. உடலுக்கு வயதாகும்போது, பாவத்தைப் புறம்பே ஒதுக்குவது கடினமாகும்போது, உலகத்தில் வெறுப்பும், கசப்பும் அதிகமாகும்போது, அது யாவும் முடிவுக்கு வரும். வாழ்வின் சோதனைகள் யாவும் சற்றுக்காலமே இருக்கும். கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை வைப்பவர்களுக்கு முன்னால் நித்திய வாழ்வு உள்ளது (1:6).

(2) கர்த்தர் மறுபடியும் வருவார் என்பதால், ஒரு நபர் தேவையில் உள்ள அயலகத்தாருக்கு உதவுகிறாரா இல்லையா என்பது பொருட்படுத்தப் படக்கூடியதாக உள்ளது. ஒருவர் மற்றவர்களுடன் உண்மை பேசி நியாயமாக நடக்கிறாரா இல்லையா என்பது பொருட்படுத்தப் படக்கூடியதாக உள்ளது. வாழ்வானது ஒரு இலக்கை நோக்கிச் செல்வதால், அது ஒரு அர்த்தத்தையும் திசையையும் கொண்டுள்ளது.

(3) கர்த்தர் மறுபடியும் வருவார் என்பதால், இந்த உலகத்தின் விஷயங்களில் தேவன் நேரடியாக ஈடுபடுகிறார் என்ற உறுதிப்பாட்டைக் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ளனர். அவர் தமது பிள்ளைகளை ஒருக்காலும் விட்டுவிடவோ அல்லது கைவிடவோ மாட்டார் (5:7). கிறிஸ்துவின் முதலாம் வருகை மற்றும் இரண்டாம் வருகை ஆகியவற்றிக்கு இடைப்பட்ட காலத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்கின்றனர். அவர்கள் இப்போதே ஒரு இராஜ்யத்தைக் கொண்டுள்ளனர், இருப்பினும் இனி வெளிப்படுத்தப்பட்ட வேண்டிய இராஜ்யம் ஒன்றும் உள்ளது.

## உபத்திரவமும் சந்தோஷமும்

1 பேதுரு நிருபமோ அல்லது வேதாகமத்தில் வேறு எந்தப் புத்தகமோ, குற்றம் அறியாத மக்கள் சிலவேளைகளில் துன்புறுவது ஏன் என்பதற்கு விரிவான விளக்கம் தருவதில்லை. இதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய சில கருத்துக்களை, 1 பேதுரு நிருபம் கிறிஸ்தவர்களுக்கு அளிக்கிறது.

(1) தேவனுடைய மக்கள் தங்கள் சொந்த தவறுகளினால் உபத்திரவப்படுவதில்லை, ஏனெனில் உலகம் முழுவதும் சாத்தானுடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. பிசாசானவன் ஆத்துமாக்களைப் பட்சிக்க நாடுகிறான் (5:8). உலகத்தில் ஏராளமானபேர் பிசாசின் பிடியின்கீழ் சிக்கியுள்ளனர். பிசாசுக்கு இணக்கமானவர்கள், கிறிஸ்துவின் நற்தன்மைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்துள்ளவர்களை எதிர்த்து அவர்களை உபத்திரவப் படுத்துவதில் வியப்பெதுவும் இல்லை.

(2) சில உபத்திரவங்கள், பாவத்தின் நேரடி விளைவாக உள்ளன. விஷயம் அப்படி இருக்கையில், கிறிஸ்தவர்கள் மனந்திரும்ப வேண்டும். இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவரான தேவன் மன்னிப்பார். தேவனுடைய பிள்ளைகள் மனந்திரும்பி அவரிடமாய்த் திரும்பும்போது, சில விஷயங்களில், இந்த வாழ்வில் உபத்திரவப்படுதல் என்பது நீக்கிப்போடப்படும். பேதுரு தமது வாசகர்கள், தீமை செய்வதால் பாடுபடுபவர்களாக ஒருக்காலும் இருக்கக் கூடாதபடி வாழவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் (2:11, 12; 4:15, 16).

(3) கிறிஸ்தவர்கள் பாடுபடும்போது, அவர்கள் இயேசுவின்

*உதாரணத்தைப் பின்பற்றுகின்றனர். இயேசு இந்த உலகத்திற்காகப் பாடுபட்டார் (2:24). அவரைப் பின்பற்றுபவர்களும், மற்ற மக்கள் விசுவாசத்திற்குள் வரவேண்டும் என்பதற்காக அவரது பாடுகளில் பங்கேற்க வேண்டும் என்பதில் ஒரு கருத்து உள்ளது.*

## பேதுருவைப் பற்றிய வசீகரமான வரலாறு

*கனவு ஒன்றைக் கொண்டிருந்த கிறிஸ்தவரைப் பற்றிய கதை ஒன்றுள்ளது. அவர், தூதர் ஒருவரால் நடத்தப்பட்ட பரலோகத்திற்கான சுற்றுப்பயணம் ஒன்றில் தாம் கலந்து கொண்டதாகக் கனவு கண்டார். தாம் கண்ட காட்சிகளைப் பாராட்டிய வண்ணம் தேவனுக்குத் துதியை ஏறெடுத்துக் கொண்டே அவர் நடந்து செல்லுகையில், அவர் தமது வலது புறத்தில் ஒன்றுகூடியிருந்த மக்கள் குழு ஒன்றைக் கண்டார். அவர் தமது வழிகாட்டி தூதரிடத்தில், "இந்த மக்கள் யார்? அவர்கள் எந்த மனிதரைச் சுற்றிச்சூழ்ந்து கொண்டிருக்கின்றனர்?" என்று கேட்டார். தூதர் அதற்கு, "அங்கு பேசிக் கொண்டிருக்கும் மனிதர் பவுல் ஆவார். அவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்ட தேவனுடைய ஆச்சரியமான கிருபைகளைப் பற்றி விளக்கம் தருகிறார்" என்று பதில் உரைத்தார். அதற்கு அம்மனிதர், "இந்தக் குழு என்ன விட அதிகம் கற்றவர்களும் அதிகம் நீதிமான்களுமாகவும் உள்ளவர்களைக் கொண்டுள்ளது, நான் அங்கு இருக்க இயலாது" என்று தமக்குத் தாமே நினைத்துக் கொண்டார்.*

*அவர்கள் இன்னும் சற்றுத் தூரம் பயணம் சென்றனர், அங்கு அவரது இடது புறத்தில் இன்னொரு குழுவானது ஒரு போதகரைச் சுற்றிச் சூழ்ந்திருந்தது. அவர் தமது வழிகாட்டியிடம் "இவர்கள் யார்?" என்று திரும்பவும் கேட்டார். அதற்குத் தூதர், "இங்கு பேசிக்கொண்டிருப்பவர், அப்போஸ்தலரான யோவான் ஆவார். அவர் தாம் கர்த்தருடைய மார்பில் சாய்ந்துகொண்டிருந்த அந்த இரவின் நினைவுகளைப் பற்றிப் பேசுகிறார். தேவன் தமது மக்கள் ஒவ்வொருவர்மீதும் அன்புகூருதல் பற்றி அவர் இந்தத் கூட்டத்தாருக்குக் கூறுகிறார்" என்றார். அப்போது அந்த மனிதர் கடந்து சென்றார். இந்த மக்கள் பக்தியுள்ளவர்களாகவும் நல்லவர்களாகவும் இருந்தனர். தாம் அங்கு இருக்க இயலாது என்று அம்மனிதர் உணர்ந்தார்.*

*அவர்கள் நடந்து செல்லுகையில், அவர் மூன்றாவதாக ஒரு குழு கூடியிருப்பதைக் கண்டார். அவர், "இந்த மக்கள் யார்?" என்ற அதே கேள்வியைத் திரும்பவும் கேட்டார். அதற்கு வழிகாட்டி, "அது அப்போஸ்தலரான பேதுரு ஆவார். அவர் இந்த மக்களுக்குத் தாம் கர்த்தரை மறுதலித்த இரவு பற்றிக் கூறிக்கொண்டிருக்கிறார்" என்றார். அம்மனிதர் தமக்குதாமே, "நான் நிற்கலாம் என்று நினைக்கிறேன். பேதுரு கூறும் விஷயத்துடன் என்னை உறவுபடுத்த முடியும்" என்று நினைத்தார். இந்த கதையானது வசீகரமானதாக உள்ளது, ஆனால் இது, விசுவாசம் மற்றும் சந்தேகம் ஆகியவற்றிற்கும், அப்போஸ்தலரான பேதுருவின் வைராக்கியம் மற்றும் பலவீனம் ஆகியவற்றிற்கும் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள மன ஈர்ப்புப் பற்றி விளக்குகிறது.*

## குறிப்புகள்

[1]*1 பேதுரு நிருபத்தை இவ்வாறு விளக்கியுரைத்தல், மற்றவர்கள் மத்தியில் மிகவும் முன்னேற்றத்திற்கு உரியதாக இருந்தது,* by Frank L. Cross, *1 Peter: A Pascal Liturgy* (London: A. R. Mowbray & Co. Ltd., 1954). *அவர் மட்டான எண்ணிக்கையில் பின்பற்றாளர்களைக் கொண்டிருந்தார்.* [2]John H. Elliott, "The Rehabilitation of an Exegetical Step-Child: 1 Peter in Recent Research," *Journal of Biblical Literature* 95 (June 1976): 243–54. 1976 *க்குப் பின்பு இந்த நிருபத்தின் மீது மிக மேன்மையான விளக்கவுரைகள் உண்டாக்கப்பட்டுள்ளன.* [3]*தொடக்ககால சபையின் சாட்சியத்திற்கு, பின்வரும் புத்தகத்தில் காணவும்:* J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), xxxii. [4]*பேதுரு ரோமாபுரியில் மரித்தார் என்பதற்கான சாட்சியம் மிக முந்தியதும் பலமானதுமாக உள்ளது. ரோமாபுரியின் கிளமெண்ட் என்பவர், பேதுரு அந்த நகரத்தில் வேதசாட்சியாக மரித்தார் என்று கருத்துத் தெரிவித்தார்* (*1 Clement* 5.4). *இக்னேஷியஸ் என்பவரும் இதையை குறிப்பிட்டார்* (Ignatius *Romans* 4.2). *ஈசூபியஸ் என்பவர், ரோமாபுரியின் காயு என்பவரும் கொரிந்து நகரின் தியோனிசியு என்பவரும் இதே விளைவைப் பெற்றனர் என்று குறிப்பிட்டார்* (Eusebius *Ecclesiastical History* 2.25). [5]*சீலா இந்த நிருபத்தை எழுதவில்லை ஆனால் இதைத் கொண்டு சென்றவராக இருந்தார் என்று, வெயன் குரூடென் அவர்கள், பலமான கருத்தை ஏற்படுத்தியுள்ளார்.* (Wayne A. Grudem, *The First Epistle of Peter: An Introduction and Commentary,* Tyndale New Testament Commentaries, vol. 17 [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988], 23–24.) *எட்வர்டு கோர்டென் செல்வின் அவர்கள், சீலாவே இந்த நிருபத்தை எழுதியவராக இருந்தார் என்று நம்பத்தகுந்த வகையில் விவாதித்துள்ளார். 1 பேதுரு நிருபத்தில் காணப்படும் உயர்வான கொய்னி கிரேக்க மொழிநடையானது, அப்போஸ்தலர், சீலாவையோ அல்லது வேறு யாராவது ஒருவரையோ, இதை எழுதியவராகக் கொண்டிருப்பார் என்ற கருத்து உள்ளாகத் தெரிவிக்கிறது. 1 பேதுரு நிருபத்தில் தெளிவாகத் தெரியவரும் மொழியின் நிபுணத்துவத்திற்கு நேரத்தையோ அல்லது ஆதாரமூலங்களையோ, கலிலேய மீனவர் ஒருவர் கொண்டிருப்பார் என்பது சாத்தியமற்றதாக உள்ளது.*) (Edward Gordon Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text, with Introduction, Notes, and Essays,* Thornapple Commentaries, 2d ed. [London: Macmillan & Co., 1947; reprint Grand Rapids, Mich.: Baker Book House, 1981], 11–16.) [6]*2 பேதுரு 1:16-18ல் மறுரூபமாகிய நிகழ்வுபற்றிப் பேதுருவின் மறைவான குறிப்பு, பேதுரு இதை எழுதியிருக்க முடியாது என்பதற்கு ஆதாரமாக விமர்சகர்களால் பயன்படுத்தப்படுதல் என்பது ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. சுவிசேஷத்தில் உள்ள இப்படிப்பட்ட நிகழ்வுகள் மீது, அப்போஸ்தலர் செயற்கையாக ஆர்வம் கொண்டிருக்க மாட்டார் என்று அவர்கள் வாதிடுகின்றனர். விமர்சகர்கள் இரு வழிகளையும் கொண்டிருக்க இயலாது.* [7]*நடபடிகள் புத்தகம் எழுதப்படுவதற்கு முன்னரே பவுல் நிருபங்களை எழுதியதாகத் தோன்றுகிறது, ஒரு கருத்தில் நடபடிகள் புத்தகம் புதிய ஏற்பாட்டில் பேதுருவைப் பற்றிய கடைசிக் குறிப்பாக உள்ளது. இருப்பினும், நடபடிகள் வரலாற்றை விவரிக்கும் சொற்றொடர்களில், பிற்பாடு பவுல் தமது நிருபங்களில் பேதுருவைப் பற்றிக் குறிப்பிட்டபோது, அது நடபடிகள்* 15*ன் எடுத்துரைப்பிற்குப் பிந்தியதாக இருந்தது.* [8]Strabo *Geography* 16.1.5. [9]*சகரியா* 5:5-11*ல், "துன்மார்க்கம்" ஒரு மரக்காலில் வைக்கப்பட்டு, சிறகுள்ள இரண்டு பெண்களால், "சிநெயார்" தேசத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டது. சிநெயார், அதாவது பாபிலோன் என்பது இஸ்ரவேலில்*

*இருந்து நீக்கப்பட்ட எல்லா துன்மார்க்கத்திற்கும் இருப்பிடமாக இருந்தது.*
[10]C. F. D. Moule, "The Nature and Purpose of 1 Peter," *New Testament Studies* 3 (November 1956): 10.

[11]*உதாரணத்திற்கு, பின்வரும் புத்தகத்தில் காணவும்:* J. W. C. Wand, *The General Epistles of St. Peter and St. Jude* (London: Methuen & Co., Ltd., 1934), 13.